
981
15-11-54
கண்ணன்
குழந்தைகளின் பத்திரிகை
மாதம் இருமுறை
-2-
அணா

# கேட்டீர்களா!

## சென்னையில் காங்கிரஸ் மகாசபை

இந்த ஆண்டு 60-ஆவது அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் சென்னையை அடுத்த ஆவடியில் ஜனவரி 17 முதல் 23-ஆம் தேதி வரையில் நடைபெறும். இப்போதுள்ள காங்கிரஸ் தலைவர் நேருஜி பதவியிலிருந்து விலக விரும்புவதால் சௌராஷ்டிர முதன் மந்திரி ஸ்ரீ தேபார் அவர்களைக் காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுப்பார்கள் என்று தெரிகிறது. காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் இதற்குமுன்பு இங்கே 1927-ஆம் வருஷத்தில்தான் கூடியது. டாக்டர் அன்சாரி அந்த வருஷத்துத் தலைவராக இருந்தார்.

## புதுவித எஞ்ஜின்

'டபிள்யூ, எம்.' என்ற புதுமாதிரியான எஞ்ஜின்கள் பரீட்சார்த்தமாக கள்ளிக்கோட்டை-மங்களூர் பகுதியில் நவம்பர் 6-ஆம் தேதி முதல் விடப்பட்டு வருகின்றன. உருவத்தில் 'டாங்கி' போல் இருக்கிறது இந்த எஞ்ஜின். இதன் எடை 120 டன். 800 டன் எடையை இழுக்கக் கூடியது. கள்ளிக்கோட்டையிலிருந்து சென்னைவரையில் செல்ல 5½ டன் கரிதான் இதற்குச் செலவாகிறது. அதே தூரத்திற்குத் தற்போதுள்ள எஞ்ஜின்களுக்கு 10 டன் கரி செலவாகிறது. இந்த எஞ்ஜின்கள் ஓடுவது வெற்றிகரமாக இருந்தால் மேலும் இதேபோன்ற எஞ்ஜின்களை உபயோகிப்பார்களாம்.

## சிங்காரம்பிள்ளை ஹைஸ்கூல் பத்திரிகை

பெரும்பாலும் பள்ளி மாணவர்களே எழுதியுள்ள இந்தப் பத்திரிகை வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை உயர்தரப் பாடசாலையிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் சுவையும் பயனுமுள்ள பல கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியாகியிருக்கின்றன. மாணவர்களும் மாணவிகளும் மிகவும் சிறப்பான முறையில் எழுதப் பழகியிருக்கிறார்கள். இது தவிர மாணவ மாணவிகளுக்காக இலக்கியச் சங்கம், விளையாட்டுப் போட்டிகள், விழாக்கள் இவைகளெல்லாம் அடிக்கடி நடைபெறுவதை அறிகிறோம். பிழையின்றி நல்ல காகிதத்தில் அழகாக இதனை வெளியிட்டுள்ள ஆசிரியர் குழாத்தைப் பாராட்டுகிறோம்.

## நீராவியின் கதை

பி. டி. ஐ. புக் டிபோ (பங்களூர்) நீராவியின் கதை என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இதை ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி அவர்கள் மொழிபெயர்த்திருக்கிறார். ரெயில் எஞ்ஜினைப்பற்றி எளிய தமிழில் மிக விளக்கமாக இதில் கூறப்பட்டிருக்கிறது. அழகாக இதைப் படங்களுடன் அச்சிட்டிருக்கிறார்கள்.

## குழந்தைப் புத்தக விழா மலர்

குழந்தை எழுத்தாளர் சங்க ஆதரவில் ஆண்டுதோறும் நடைபெறும் குழந்தைப் புத்தகக் காட்சி இவ்வாண்டு பொங்கல் சமயம் சென்னையில் நடைபெறவிருக்கிறது அப்போது ஒரு விசேஷ மலர் வெளிவருகிறது. குழந்தைகளுக்காக எழுதுவோர் அனைவரையும் பற்றிய குறிப்புக்களை மலரில் சேர்க்கப்போவதால், குழந்தை எழுத்தாளர்கள் தங்களது பெயர், வயது, விலாசம், தங்களைப் பற்றிய குறிப்புக்கள் முதலியவற்றை எழுதி, ''காரியதரிசி, குழந்தை எழுத்தாளர் சங்கம், 135, பவழக்காரத் தெரு, சென்னை 1'' என்ற விலாசத்துக்கு விரைவில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# கண்ணன்




## பொருளடக்கம்


மலர்: 5 இதழ்: 22

15 - 11 - '54



| | | |
|---|---|---|
| குழந்தைகளே ! | பக்கம் | 2 |
| லீடர் மணி | .. | 3 |
| என்ன வேற்றுமை | .. | 8 |
| தூங்கும் அழகி | .. | 9 |
| கேளுங்கள், சொல்கிறேன்! | .. | 10 |
| பிஞ்சு நெஞ்சுகள் | .. | 13 |
| தங்க ரோஜா | .. | 18 |
| திருடன் யார்? | .. | 24 |
| பத்தாவது முட்டாள் | .. | 29 |
| சந்திரகிரிக்கோட்டை | .. | 33 |
| பாவம், கண்டக்டர் | .. | 38 |
| எங்கள் பகுதி | .. | 39 |

கேட்டீர்களா! - 2-ஆவது அட்டை

கண்ணன் கிளைக் கழகம் -3-ஆவது அட்டை



வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-



கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.


## அருமையான சம்பவம்

ஜமீன்தார் ஒருவர் தம் மனைவியுடன் வைர வியாபாரியின் கடைக்கு வந்தார். வேண்டிய நகைகளைப் பொறுக்கிக் கொண்டார். விற்பனை வரி கொடுக்கமாட்டோம் என்று ஜமீன்தார் கண்டிப்பாகக் கூறவே, கடை முதலாளி பில் போடாமலே பணத்தைப் பெற்றுக்கொண்டார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஜமீன்தாரிணி மாத்திரம் காரில் வந்திறங்கினுள். அதே மாதிரி நகைகள் மற்ருெரு செட் பில் போட்டுப் பெற்றுக்கொண்டு வரித் தொகையை மாத்திரம் கடைக்காரனிடம் செலுத்திவிட்டுப் புறப்பட்டாள். கடைக்காரர் திடுக்கிட்டார். பில்லின் முழுத் தொகையையும் கொடுத்துவிட்டு நகைப் பெட்டியை எடுத்துச் செல்லும்படி பெட்டியைப் பிடுங்கிக் கொண்டார். ஜமீன்தாரிணியோ போலீஸ் அதிகாரியைக் கூப்பிட்டுவந்தாள். பில்லின் முழுத்தொகையைச் செலுத்திவிட்டதாகவும், பணப் பெட்டியைச் சோதித்துக் கணக்குப் பார்த்தால் தெரிந்துவிடும் என்றும் கூறினுள். கடைக்காரர் சங்கடமான நிலையில் அகப்பட்டுக்கொண்டு விழித்தார். நடந்ததைச் சொன்னுல் பொய்க் கணக்கு அம்பலமாகிவிடுமே என்று பயந்து நகைப் பெட்டியைக் கொடுத்துவிட்டார்.

எல்லாரும் சென்ற உடனே குமாஸ்தா மற்ருெரு பெட்டியை முதலாளியின் எதிரில் வைத்தார். அவளிடம் இரண்டாவது தடவை கொடுத்தது, எதிர்க் கடையில் வாங்கி வந்த இமிடேஷன் வைர நகைகள் என்று சொன்னுர்.

குமாஸ்தாவை மெச்சி நிறைய இனும் கொடுத்தார் முதலாளி.

அவர்தான் எங்கள் மாமா!

V.D. சச்சிதானந்தன், சென்னை-1.

# குழந்தைகளே!

தீபாவளி மலரைப் பாராட்டி வந்த நூற்றுக்கணக்கான கடிதங்களை என்ன செய்வதென்றே தெரியாமல் விழிக்கிறேன். எல்லாவற்றையும் பிரசுரிக்கப் பத்திரிகையில் இடமுமில்லை. கடிதங்களாகவே பிரசுரித்தால் வழக்கமாகப் படிக்கும் பகுதிகளை என்ன செய்வது? அதனால் மாதிரிக்கு இரண்டே கடிதங்களை மட்டும் பிரசுரித்திருக்கிறேன். சென்ற இதழிலும் இந்த இதழிலும் பரிசு பெற்ற விமரிசனக் கடிதங்கள் வரவில்லை. 1-11-54 இதழ் பற்றிய விமரிசனத்திலிருந்து பரிசுக் கடிதம் மீண்டும் வெளிவரும்.

கண்ணனில் புதிதாக ஆரம்பமாகியுள்ள போட்டோ க்விஸ், பாலர் கவி அரங்கம் முதலியனவற்றையும் ஜனவரி இதழ் முதல் வழக்கமாக வெளியிடுகிறேன். தூங்கும் அழகி டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்துவிடும். புது வருஷ ஆரம்பத்தில் புதிய சித்திரத் தொடர் ஆரம்பமாகும். அதற்குப் பிரசித்தி பெற்ற கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்து வெளியிட எண்ணியிருக்கிறேன். சந்திரகிரிக் கோட்டையும் லீடர் மணியும் உங்கள் அபிமானத்தைப் பெற்றிருக்கின்றன என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இரண்டு கதைகளுமே சுவாரஸ்யமான கட்டத்துக்குள் நுழைந்திருக்கின்றன. சந்திரகிரிக்கோட்டை முன்னதாக முடிந்துவிடும். போகப் போக இறுதி வரையில் உங்களை இந்தக் கதைகள் இரண்டுமே கவர்ந்துவிடும் என்பது நிச்சயம். புது வருஷத்திலிருந்து கண்ணன் முற்றிலும் புது மாதிரியாகத் திகழும்.

கண்ணன் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர விரும்பும் மாணவர்கள் பூர்த்தி செய்த கூபன்களை ஓர் அணாத் தபால் தலை ஒட்டி, புக்போஸ்டில் அனுப்பினாலே போதும். தனியாகக் கடிதம் எதுவும் எழுத வேண்டாம். எழுதினால் இரண்டணாத் தலை ஒட்ட வேண்டியிருக்கும். அது அவசியமில்லை. சில குழந்தைகள் இது தெரியாமல் வீணாக இரண்டணா செலவழிக்கிறார்கள்.

வெளி நாட்டிலுள்ள சில குழந்தைகள் கண்ணன் வெளியீடுகளுக்காகவும் சந்தாவுக்காகவும் அவரவர் நாட்டுத் தபால் தலைகளை வாங்கி அனுப்பி விடுகிறார்கள். அந்தத் தலைகள் இந்த நாட்டில் செல்லா. அதற்குப் பதில் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டராக வாங்கி அனுப்பலாம். ஆனால் அதற்குக் கமிஷன் சேர்த்து அனுப்பவேண்டும்.

சில குழந்தைகள் செய்வது தெரியாமல் இரண்டணா உறைக்குள் ரூபாய் நோட்டை வைத்து அனுப்பி விடுகிறார்கள். இப்படிச் செய்யக் கூடாது. இது சட்டத்துக்கு விரோதம். அதனுடன் தபால் எங்கள் கைக்கும் வந்து சேராது. இரண்டணா மூன்றணா செலவைப் பார்க்காமல் மணியார்டர் மூலமாகவே பணத்தை அனுப்பிவிடுங்கள்.

காந்தி மண்டப நிதிக்காக மீண்டும் சில குழந்தைகள் பணம் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் பெயரை வேறு ஒரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறேன். இனி அனுப்புபவர்களின் பெயரையும் தொடர்ந்து வெளியிடுகிறேன். இந்தப் பணத்தை மொத்தமாக நம் கவர்னர் அவர்களிடம் சேர்த்துவிடுவோம்.

—ஆசிரியர்.

புதிய தொடர் நாவல்



# லீடர் மணி

'ஆர்வி'

பாதை போகப் போக நீண்டு வந்தது. மணியின் நடையில் வேகமில்லை. ஆனால் அவனுடைய எண்ணங்கள் மட்டும் ஆயிரம் தடவை மூங்கிலடிக்குப் போய் வந்தன.

திடீரென்று இந்த இரவில் புறப்பட்டு வந்தால் யாருக்குத்தான் சந்தேகம் வராது? அப்பாவிடம் என்ன சொல்வது? அவர்கள் இரண்டு பேரும் அநுதாபப்பட மாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம். அப்படியானால் நாளைக்கே அவன் அத்தை வீட்டுக்குத் திரும்பும்படி இருந்தாலும் இருக்கும். எப்படித் திரும்பிப்போய் அவர்கள் வீட்டில் இருக்கமுடியும்? மணியின் மனசு ஒரே கலக்கமாகக் கலங்கியது. அவனுடைய பிஞ்சு உள்ளம் இனி என்ன செய்யப் போகிறோம் என்பது தெளிவாகாமல் துடித்தது.

தூரத்தில் ஏதோ கிராம தேவதையின் கோயில் தெரிந்தது. அந்த இடத்தில் பகலில் நடந்து செல்லவே கொஞ்சம் யோசனையாக இருக்கும். இரவில், அதுவும் தனியாக ஒரு சிறுவன் பயமில்லாமல் எப்படி அதைத் தாண்டிப் போகமுடியும்? மணி சிறிது நேரம் தயங்கி நின்றான். பாதை அந்த இடத்தில் வளைந்து சென்றது. பின்னால் வெகு தொலைவில் ஏதோ பேச்சுக் குரல் கேட்பது போல் இருந்தது. மணி திரும்பிப் பார்த்தான். தூரத்தில் வெள்ளைத் துணி போர்த்திய ஓர் உருவம் தெரிவதுமாதிரி இருந்தது. அவன் பயம் அதிகரித்தது. மூச்சுத் திணறியது. முன் பின் யோசியாமல் புறப்பட்டு வந்தது எத்தனை முட்டாள்தனம்? கிராம தேவதையின் கோவிலுக்குப் பக்கத்தில் பெரிய கூந்தல் பனை ஒன்று நீண்ட மட்டைகளை விரித்துக்கொண்டு நின்றது. அதைப் பார்க்கவே மணிக்குத் திகிலாக இருந்தது. திரும்பிப் போகவும் வழியில்லாமல், முன்னே செல்லவும் தைரியமில்லாமல் அவன் ஸ்தம்பித்துப் போய் நின்றான். புதர் ஓரத்தில் ஒரு பச்சைத் தவளை கொட்டை விழிகளுடன் அவன் நிற்பதைப் பார்த்துக்

கொண்டிருந்தது. மணி கைகளால் கண்ணை மூடிக்கொண்டு தெய்வமே என்று நடந்தான். அந்த இடத்திலேயே தயங்கி நிற்பதைவிட நடந்து செல்வது எவ்வளவோ மேல் என்று தோன்றியது.

மணி அடிக்கடி கைகளை விலக்கிக்கொண்டு கண்களைத் திறந்து பார்த்தான். அந்த வெள்ளைத் துணி போர்த்திய உருவம் ஒரு சமயம் அவனை நெருங்கி வருவது போல் இருந்தது. இன்னொரு சமயம் அது இருப்பதே தெரியவில்லை. பாதையின் வளைவில் அது மறைந்து மறைந்து அவனைப் பின் தொடர்ந்து வருகிறதோ? உலகத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் அவனைப் பயமுறுத்துவதற்காகவே இருப்பனபோல் தோன்றின. நெஞ்சு நினைக்க முடியாத நினைவுகளை யெல்லாம் எண்ணி நடுங்கியது.

கால் நாழிகை நேரத்தில் அந்தக் கிராம தேவதையின் கோயில் சமீபமாக அவன் வந்துவிட்டான். இன்னும் ஒரு கால் நாழிகை நேரம் நடந்து போய் விட்டால் போதும்; அப்புறம் எதற்கும் பயமில்லை. அந்த இடத்தைக் கடந்துவிட்டால் வழி நெடுக வீடுகள், கடைகள் ஏதாவது ஒன்று இருந்துகொண்டே இருக்கும். ஏதேனும் நடந்தால் கூட, கூப்பாடு போட்டால் மனித உதவி கிடைக்கும். ஆனால் அந்த இடத்தை எப்படித் தாண்டிப் போவது? அதுவே இப்பொழுது பெரிய மலையாக இருக்கிறதே!

இந்தச் சமயத்தில் அந்த உருவம் வெகு வேகமாக ஓடி வருவது தெரியவே, மணியின் கால்களும் தன்னை யறியாமல் ஓடத் தொடங்கின. இவன் ஓட ஓட, பின்னால் வந்த அந்த உருவத்தின் உருவமும் அவனை நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட மணிக்கு அது நிச்சயம் மனித உருவமாகத் தோன்றவேயில்லை. பேயோ பிசாசோ தன்னை இந்தத் தனியிடத்தில் துரத்துவதாகவே தோன்றியது. அவன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கண்மூக்குத் தெரியாமல் ஓடலானான்.

கடைசியில் எப்படித்தான் அவன் அந்த இடத்தைத் தாண்



டிச் சென்றானோ, அது அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். சாலை ஓரமாக இருந்த ஒரு வீட்டை அடைந்த பிறகுதான் அவனுக்கு நல்ல மூச்சு வந்தது. அந்த வீட்டின் வாசலில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் உள்ளேயாவது இருப்பார்கள் என்ற தைரியத்தில் அவன் திரும்பிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அவனைத் துரத்திக் கொண்டு வருவதுபோல் இருந்த உருவத்தைக் காணவே காணோம். எட்டியவரையில் யாரும் அவனைப் பின்பற்றி வருவதாகவே தெரியவில்லை. ‘சரி; வெறும் மனப் பிராந்தி’ என்று மணி மீண்டும் தைரியமாக நடக்கத் தொடங்கினான். அப்போது யாரோ, “பையா! ஏ பையா” என்று கூப்பிடும் குரல் கேட்கவே மணி திரும்பிப் பார்த்து நின்றான். அவனுக்குப் பின்னாலேயே வந்துகொண்டிருந்த மற்றொரு பையன் மூச்சு இரைக்க இரைக்க அவன் அருகில் வந்தான்.



“யார் நீ? எதற்காகக் கூப்பிடுகிறாய்?”

“மூங்கிலடி இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்? தனியாகப் போகப் பயமா இருக்கு..” என்றான் அந்தப் பையன்.

“மூங்கிலடியா? அப்படியானால் நீயா...நீயா...”

“ஆமாம்; நான்தான் உன் பின்னாலேயே ஓடி வந்தேன்..”

“இப்பொழுது திரும்பிப் பார்த்த போது உன்னைக் காணோமே!”

“நான்தான் உனக்குப் பின்னாலேயே வந்தேனே...நீ வெகு தூரத்தில் வேறு எதையோ பார்க்கிறாய் என்று எண்ணினேன். என்னையா பார்த்தாய்?” என்றான் அந்தப் பையன்.

மணி அந்தப் பையனுக்குக் கால்கள் பூமியில் படுகின்றனவா என்று சந்தேகத்தோடு பார்த்தான். கால்கள் இருந்தன. கண்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்தான். அதுவும் சரியாக இருந்தன. அப்புறம்தான் கொஞ்சம் தெம்பு வந்தது.

“நீ மூங்கிலடிக்கா போகிறாய்? யார் வீட்டுக்கு?” என்றான்.

“நான் மூங்கிலடியைத் தாண்டிப் போகப் போகிறேன். போகும்

போதே பேசிக்கொண்டு போவோம்...''

மணி அந்தத் துணையிடம் சந்தேகம் கொண்டவாறே நடக்கத் தொடங்கினான். அந்தப் பையன் எதையும் சரிவரச் சொல்வதாக இல்லை. அவன் பேசியதைப் பார்த்தால் அவனும் தன்னைப் போலவே வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் ஓடி வந்திருப்பவன் போலவே இருந்தது. அதற்குமேல் அவனைக் கிண்டிக் கிண்டி விசாரிக்க மணிக்குப் பிடிக்கவில்லை.

மூங்கிலடிப் பாலம் வந்துவிட்டது. அந்த இடத்தில்தான் அவர்கள் பிரிய வேண்டும். இதை உணர்ந்த மணி, ''சரி; உன் பெயர் என்ன? அதையாவது சொல்லிவிட்டுப் போ'' என்றான்.

''என் பெயர் கங்கன். கங்காதரன் என்று பள்ளிக்கூடத்தில் பெயர்.''

அதற்குமேல் அவர்கள் சாதாரணமாக விடை பெற்றுக்கொண்டு பிரிந்தார்கள். மணிக்கு ஒருவிதத்தில் அவனோடு வந்தது ஆறுதலாக இருந்தது. சொந்தக் கவலைகளை ஒருவாறு இதுவரை அவன் மறந்திருந்தான். இப்போது மீண்டும் அந்தக் கவலைகள் எல்லாம் அவனைக் கவிந்துகொண்டன.

நெஞ்சு படபடக்க அவன் தன் வீட்டை அடைந்தபோது நடுநிசிக்குமேல் ஆகியிருந்தது. ஆனால் வீட்டினுள்ளே ஒருவரும் தூங்கவில்லை என்று தோன்றியது. மணிக்கு இது இன்னும் கலக்கத்தை உண்டு பண்ணியது. இவ்வளவு நேரம் அவர்கள் வீட்டில் வழக்கமாக எல்லாரும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பார்கள். இன்று மட்டும் என்ன வந்தது? ஒரு சமயம் தன்னைத் தேடிக் கொண்டு தனக்கு முன்னால் இங்கே யாராவது வந்திருப்பார்களோ? அப்படி வந்திருந்தால் அவனைத் தாண்டிக் கொண்டு அல்லவா வந்திருக்க வேண்டும்? 'அப்படி இருக்காது; வேறு ஏதாவது காரணமாக இருக்க வேண்டும்' என்று நினைத்துக்கொண்டு அவன் வாசலில் இருந்த திண்ணை மீது ஏறினான். அங்கிருந்த ஜன்னல் வழியாக வீட்டுக் கூடம் தெரிந்தது. ஏதோ காரசாரமான பேச்சுக் குரல்கள் மட்டும் கேட்டனவே ஒழிய என்ன பேசுகிறார்கள் என்பது சிறிது நேரம் வரையில் பிடிபடவில்லை.

மணி ஜன்னல் அருகேயே உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய சித்தி கீழே உட்கார்ந்து கண் கலங்க விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள். அவனுடைய அப்பா பக்கத்தில் குறுக்கும் நெடுக்குமாக ஏதோ யோசனையுடன் நடை போட்டுக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு அவர் சித்தியைப் பார்த்து, ''சரி சரி; நீ அழுது கிழுது செய்யாதே. உன் இஷ்டப்படியே செய்து தொலைக்கிறேன். வாயை மூடிக்கொண்டு தூங்கு!'' என்று சமாதானப் படுத்தினார்.

வெளியில் உட்கார்ந்திருந்த மணிக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படிப் புரியும்? சித்தி எதற்குப் பிடிவாதம் பிடிக்கிறாளோ, என்னவோ? அப்பாவுக்கு அவளை மீறி என்ன செய்யமுடியும்?



"உங்க பிள்ளைக்கு என்ன செய்யப் போறேள்?" என்றாள் சித்தி.

"அந்தப் பயலைப் பற்றி இப்போ உனக்கு என்ன கவலை? எல்லாம் என் அக்கா பார்த்துக் கொள்வாள்."

மணிக்குச் 'சொரக்' என்றது. அவன்தான் அத்தை வீடு வேண்டாம் என்று ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ஓடி வந்திருக்கிறானே!

'கடக்' என்று வாசல் கதவைத் திறந்துகொண்டு சற்றும் எதிர்பாராமல் அவன் அப்பா வாசலுக்கு வந்து விட்டார். மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. வேகமாக எழுந்து திண்ணையை விட்டுக் கீழே குதித்து, ஆளோடியில் நின்றான்.

"யார் அது?"

"நான்தான் அப்பா—மணி!"

"யாரு? மணியா?"

"ஆமாம்..ம்..ம்.."

"மணியா? ஏண்டா, எங்கேடா இந்த இருட்டிலே வந்தே? எப்போ வந்தே? ஏன் வந்தே? என்ன ஊரிலே?.."

அதற்குள் சித்தியும் ஓடிவந்து விட்டாள்.

"ஏண்டா...எங்கே இந்த இருட்டிலே வந்து மொட்டுப் போல நிக்கறே? கூப்பிடக் கூடாதோ? எப்போ வந்தே நீ?" என்றாள்.

மணி பதில் ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்துகொண்டு நின்றான்.

(தொடரும்)

# என்ன வேற்றுமை

'ஜோதி மாமா'





எலுமிச்சம் பழத்துக்கும் செவ்வந்திப் பூவுக்கும்
 ஏதேனும் சொந்தம் உண்டோ?
ஏனையா சொந்தம் இல்லை?
 எலுமிச்சம் பழத்திலும் செவ்வந்திப் பூவிலும்
இருப்பது மஞ்சள்நிறம்;
 இது நல்ல உறவல்லவோ?

தென்ன மரந்தரும் தேங்காய்க்கும் சிவனுக்கும்
 சின்ன உறவும் உண்டோ?
செப்புகி றேன்கேளாய்;
 தென்ன மரத்திலே தேங்காய்க்கு மூன்றுகண்
சிவனுக்கும் மூன்றுகண்ணே;
 சிந்தித்துப் பார்த்தனையா?

ஆடும் மயிலுக்கும் குருட்டு மனிதர்க்கும்
 அமைந்த ஒற் றுமைஉண்டோ?
ஆமாம் இதோசொல்லுவேன்;
 ஆடும் மயிலுக்கும் தோகையெல் லாம்கண்கள்;
ஆனாலும் பார்ப்பதில்லை,
 அந்தகன் கண்போலே.

காமிராப் பெட்டியை நாகப்பாம் பென்று
 கருத வகைஉண்டோ?
காட்டுவேன் நீகேளாய்;
 காமிராப் பெட்டியும் நாகமும் நாம்கண்ணால்
காணப் படம் எடுக்கும்;
 கண்டிருக் கின்றாயோ?

எழுதும்பே னாவுக்கும் பெண்களின் கண்ணுக்கும்
 ஏதேனும் ஒப்புண்டோ?
இல்லையென் றார்சொல்லுவார்?
 எழுதும்பே னாவுக்கும் பெண்களின் கண்ணுக்கும்
இடுவது மை அல்லவோ?
 இதைவிட என்னவேண்டும்?

கதை: ஆர்வி

# தூங்கும் அழகி

சித்திரம்: ஸாமி




(தொடரும்)

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

*[இந்தப் பகுதியில் உங்கள் கேள்விகளுக்குப் பேராசிரியர் விஞ்ஞானம் பதில் சொல்ல வந்தாலும் வந்தார்; ஒரே சயன்ஸ் பாடக் கேள்விகளாகவே வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. பெரும்பாலான கேள்விகளுக்குப் பாடப் புத்தகத்திலேயே பதில் கிடைக்குமே என்கிறார் விஞ்ஞானம். அதனால் உங்களைச் சுற்றியுள்ளவற்றைப் பாருங்கள்; இயற்கையையும் செயற்கையையும் கவனியுங்கள். எது உங்களுக்கு உண்மையில் புரியவில்லையோ, எதற்கு உங்களுக்குச் சரியான விடை கிடைக்கவில்லையோ, அந்த மாதிரிக் கேள்விகளாகக் கேளுங்கள். அதனால் எல்லாருக்குமே நன்மையுண்டு. ஆ—ர்.]*

**எஸ். திலகவன், தூத்துக்குடி.**

நமக்கு உள் நாக்கு ஒன்று இருக்கிறதே. அது அவசியம்தானா? அப்படியானால் அதன் வேலை என்ன? நமக்கு உள்ளதுபோல் மிருகங்களுக்கும் உள் நாக்கு உண்டா?

இது மேல் - அண்ணத்தின் ஒரு கோடி என்று சொல்லலாம். இது இரண்டு காரியங்களில் உதவுகிறது. நாம் பேசும்போது மூக்குப் புறத் துளையை ஓரளவு மூடுகிறது. குரலைக் 'கணீர்' என்று கேட்கச் செய்கிறது. நாம் உணவை விழுங்குவதற்கும் இது உதவி செய்கிறது. குரங்குகளுக்கும் வேறு சில பிராணிகளிடத்திலும் இது காணப்பட்டபோதிலும் எல்லாப் பிராணிகளுக்கும் இது கிடையாது. நேராக நிமிர்ந்து நிற்கும் நமக்கு இது மிகவும் அவசியம்.

**எம். ஷாகுல்ஹமீத், மதுரை.**

வயது அதிகரிக்க அதிகரிக்க நம் தலை மயிர் நரைக்கிறதே, ஏன்?

வயது ஆக ஆக மனித உடலின் ஒவ்வொரு உறுப்பும் வலிவிழந்து வருகிறது; சக்தி குறைந்து வருகிறது; தன்மை மாறி வருகிறது. மயிர்க்காலின் அடிப்புறத்திலுள்ள பகுதியில் ரத்த ஓட்டம் குறைகிறது. ஆகையால் குறைந்த அளவில்தான் நிரமி (Pigment) அங்கே படிந்து வருகிறது. ஆகையால் பல்லாயிரக் கணக்கான மயிரைக் கறுப்பாக வைப்பதற்கு வேண்டிய நிரமி கிடைப்பதில்லை. ஆகவே அவை நிறம் மாறி, நரைத்து வருகின்றன.

**சந்திரசேகரன், நாகர்கோவில்.**

ரேடியோவில் உள்ள ஒவ்வொரு கருவியின் பெயரும், அது என்ன வேலை செய்கிறது என்றும், ரேடியோ, டெலிவிஷன் இவற்றை யார் முதன் முதல் கண்டுபிடித்தார்கள் என்றும் தெரிவியுங்கள்.

I இந்தக் கேள்விக்குச் சுருக்கமான விடை கொடுப்பது சிரமம். சௌகரியப்பட்டால் வேறொரு தடவை விவரமாகச் சொல்கிறேன். ரேடியோ என்பது ஒருவரால், ஒரு காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. பலர் பல காலத்தில் செய்து வந்ததன் சிகரமாக அமைந்தது ரேடியோ. இவர்களில் நால்வரை முக்கியமாகக் குறிப்பிடலாம்,

II 1. மின் அலைகள் என்பவை உண்டு என்று 'ஜோஸ்யம்' சொன்னவர் மாக்ஸ்வெல்.

2. அவ்வகையான அலைகள் இருக்கின்றன என்று காட்டியவர் கார்ட்ஸ்.

3. இந்த அலைகளை நெடுந்தூரம் எப்படி அனுப்புவது என்று கண்டு பிடித்தவர் மார்க்கோனி.

4. டிரையோடு என்னும் மூவழிவால்வை புத்தமைப்பாக இயற்றியவர் லீ. டி. பாரஸ்.

III டெலிவிஷன் என்பதும் இவ்வாறு பலரால் அமைக்கப்பட்டது. கடைசியாக இதற்கு உதவியவர் ஜெ. எல். பார்ட் என்பவர்.

**முத்துலக்ஷ்மி, மாட்டுவேலம்பட்டி.**

ஒரு பக்கமாகத் தலைவலி அடிக்கடி வருகிறது. அதற்குக் காரணம் என்ன? அதைத் தடுப்பது எப்படி?

இதற்குக் காரணம் சட்டென்று சொல்ல முடியாது. ஒருவேளை கண்ணிலுள்ள குறை ஏதாவது காரணமாயிருக்கலாம். தக்க டாக்டரிடம் காட்டி, வைத்தியம் செய்து கொள்வதுதான் சரி.

**என். மருதமுத்து, தொட்டியம்.**

பல் நோய் வருவது எதனுல்?

பல்லின் வேர்ப்புறத்தில், அதாவது ஈறுக்கும் உள்ளே, ஏதாவது உண்டாவது காரணமாக தொற்று நோய் இருக்கலாம்.

**பி. ராஜசேகரன், மதுரை.**

என் கைகள் நடுங்குகின்றன. இவற்றைப் போக்க என்ன வழி?

இதற்கு எத்தனையோ காரணமிருக்கலாம். தக்க டாக்டரைக் கலந்து கொண்டு, அவருடைய சொல்படி நடக்கவேண்டும்.

**கே. சதாசிவம், மதுரை.**

ஒருவர் பேசுவதையோ, பாடுவதையோ எவ்வாறு பிளேட்டில் பதிவு செய்கிறுர்கள்.

ஒலிப்பதிவு செய்ய வேண்டிய கருவியின் மீது மெதுவான மெழுக்குத் தட்டை வைக்கிறுர்கள். அந்தத் தட்டை ஒரு கருவியால் ஒரே சீராகச் சுழலும்படி ஏற்பாடு செய்கிறுர்கள்.

கருவியின் வாயில் பேச்சோ, பாட்டோ பாடுமானுல் அதன் பின்புறத்திலுள்ள மெல்லிய தகடு அதிரும். அந்தத் தகட்டோடு பிணைத்துள்ளதாயும் மெழுக்குத் தட்டைத் தொட்டுக் கொண்டிருப்பதாயும் உள்ள ஊசி முனை அசையும்; சுழலும் தட்டில் நெளிவான கோட்டை அமைக்கும். இந்தக் கோடு சுருள் வடிவமாக அமைந்தது. வெளிப்புற வட்டம் பெரிதாகவும், உள்ளே வரவரச் சிறிதாகவும் ஆகும்.

இப்படிப் பதிவு செய்தபின்பு, மெழுக்குத் தட்டின்மீது கீறப்பட்ட நெளிவுச் சுருளில் தாமிரமானது மின்சார முறையில் படியும்படி செய்வார்கள். இப்படியாகச் சற்றே கனமுள்ளதாயும், மெழுக்குத் தட்டில் உள்ள நெளிவு கோட்டின் பிரதியை ஏற்றதாயும் உள்ள தாமிரத் தகட்டுக்கு அச்சு என்று பெயர். தாமிரம் கெடாதபடி இதற்கு நிக்கல் பூச்சுப் பூசி, இதை ஒரு கெட்டி தாமிரத் தகட்டில் பொருத்துவார்கள்.

நாம் கடையில் வாங்கும் கறுப்பு நிறம் உள்ள கிராமபோன் தட்டுகளைச் செய்வதற்கு வல்கனைட் முதலிய பொருள்களை உபயோகிக்கிறுர்கள். தக்க அளவு வெப்பமுற்றபோது இவை சிறிது நெகிழ்ச்சி பெறும். அப்போது இவற்றின்மீது அச்சை வைத்து மிக நன்ருக அழுத்துவார்கள். குளிர்ந்த தண்ணீரை விட்டு அதை ஆறச் செய்வார்கள்.

அச்சிலிருந்து அந்தத் தட்டை எடுத்தவுடன், அது நன்ருக இறுகியிருக்கும். மெழுக்குத் தட்டின் மீது ஊசி இட்ட நெளிவுக் கோட்டின் பிரதி அதில் மிகவும் திருத்தமாகப் பதிந்திருக்கும்.

**எம். ஆர். ஜயலக்ஷ்மி, தி. நகர்.**

ஆகாயத்தில் பறக்கும்போது பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும் திசைக்கு எதிர்த் திசையில் சென்றால், ஒரு மணி நேரத்தில் செல்லும் தூரத்தைக் கணக்கிட விமானத்தின் வேகத்தோடு பூமியின் வேகத்தைக் கூட்ட வேண்டுமா?

ஒரே வேகத்தில் விமானங்கள் பூமி சுற்றும் திசையிலேயே சென்றாலும், எதிர்த் திசையில் சென்றாலும் கடக்கும் தூரத்தின் வித்தியாசம் என்ன?

பூமியின் பூமத்திய ரேகையின் மேல் திருத்தமாக ஒரு ரெயில் பாதை போடப்பட் டிருக்கிறது என்று நினைத்துக்கொள். பூமி சுழலும்போது, இந்தப் பாதையின் மீதுள்ள ஒரு ரெயில் என்ஜினும், பூமியோடு கூடவே சுமந்து செல்லப்படும். அந்த என்ஜின் நின்று கொண் டிருந்தாலும் அல்லது ஓடிக்கொண் டிருந்தாலும், பூமி சுழல்வதின் காரணமாக உள்ள அதன் வேகம் (speed) பூமத்திய ரேகையில் உள்ள எந்தப் புள்ளியை எடுத்துக்கொண்டாலும் அதன் வேகமும் சமமாக இருக்கும். ஆகையால் அந்த ரெயிலின் நேர் வேகமானது (velocity) பூமியைப் பொறுத்த அளவில் எப்போதும் பூஜ்யமாக இருக்கும்.

ஓர் என்ஜின் இயங்கும்போது அதன் வேகத்தைக் கணக்கிடுவதற்குப் பூமி அசையாமலே இருக்கிறது என்று வைத்துக்கொள்ளலாம். அந்த என்ஜின் கிழக்கிலிருந்து மேற்காகவோ, மேற்கிலிருந்து கிழக்காகவோ, எந்தத் திசையாகச் சென்றாலும் அதன் வேகம் என்பது, அது சென்ற தூரத்தை அது சென்ற நேரத்தால் வகுத்துக் கிடைக்கும் ஈவாகும். பூமியின் சுழற்சி வேகத்தால் இந்த விடை மாறாது.

பூமியின் மீது உள்ள என்ஜின் எப்படிப் பூமியோடு தூக்கிச் செல்லப்படுகிறதோ, அது போல் பூமிக்கு உயரப் பறக்கும் ஆகாய விமானமும் பூமியோடு கூடவே கெட்டிக் கம்பியால் பிணைத்தது போல் இழுத்துச் செல்லப்படுகிறது. இதற்குக் காரணம் பூமியின் ஆகர்ஷண சக்தி. பூமியின் மேற் பரப்பிலிருந்து சிறிது தூரம் வரை இந்த ஆகர்ஷண சக்தியின் அளவு மாறுபடுவதில்லை என்று நாம் சாதாரணமாக வைத்துக் கொள்ளலாம்.

ஆகையால் விமானத்தின் வேகத்தைக் கணக்கிடும்போது பூமியின் சுழற்சி வேகத்தைக் கணக்கில் சேர்க்கவே வேண்டியதில்லை.

**சே. சுப்பையா, வலையப்பட்டி.**

மனிதன் உடம்பில் நகம், தலைமயிர், மேல்தோல் இவைகளில் ரத்த ஓட்டம் நடைபெறாததற்குக் காரணம் என்ன?

நகம், தலைமயிர், மேல் தோல் ஆகியவை மூன்றும் மனிதத் தோலின் மாறுபாடுகள் என்று சொல்லலாம்.

**மேல் தோல்:** இது பல அடுக்குக்களால் அமைந்தது. இதன் மேலடுக்கு அழுத்தமானது. இது உள்ளங்கை, உள்ளங்கால் முதலிய இடங்களில் தடித்து உறுதியாக இருக்கிறது. இதற்கு அடியிலுள்ள பகுதியில் ரத்த ஓட்டம் நடந்து வருகிறது. மேல் பகுதி தேயத் தேய, அடியிலிருந்து புதிய அமைப்பு மேலே வந்து கொண்டேயிருப்பதால், மேல் பகுதிக்குத் தனியாக ரத்த ஓட்டம் அவசியம் இல்லை.

(தொடரும்)

# பிஞ்சு நெஞ்சுகள்

## எஸ். வி. கிருஷ்ணன்

தனக்குப் பின்னால் 'டப்' என்ற துப்பாக்கிச் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் ரகு. அவனுடைய நண்பன் மணி துப்பாக்கியும் கையுமாகச் சிரித்த முகத்தோடு காட்சியளித்தான்.

ரகுவின் கண்களில் கண்ணீர் பெருகியது.

"ஏண்டா ரகு, பேசமாட்டேங்கறே? துப்பாக்கி வேணுமா? நீ வேணுமானால் இரண்டு சுடேன்" என்று துப்பாக்கியை ரவியின் கையில் கொடுத்தான்.

துப்பாக்கியைக் கையில் வாங்கிக் கொண்ட ரகு அதை ஒரு முறை பார்த்தான்.

"வேண்டாம், மணி. இந்தத் துப்பரக்கியினால் இரண்டு தரம் சுட்டுவிட்டால் என்ன வந்துவிடப் போகிறது? அதை நீயே சுடு. எனக்கு வேண்டாம்" என்று கூறி விட்டுக் கண்களில் வழிந்த கண்ணீரைச் சட்டைத் துணியால் துடைத்துக்கொண்டான்.

'ரகுவினுடைய தகப்பனார் ஏதோ கோபித்துக்கொண்டு விட்டார். அதனால்தான் ரகு அழுகிறான்' என்று நினைத்தான் மணி.

"எங்க வீட்டிலே இந்த வருஷம் மாப்பிள்ளை வரப்போகிறார்டா. நீ அன்னிக்குப் புதுச் சட்டை போட்டுண்டப்புறம் எங்க வீட்டுக்கு வந்துடு .. .. லட்டு, மைசூர்ப்பாகு, முறுக்கு எல்லாம் தர்றேன். மேளம் அடிக்கறதையும் பாத்துண்டே இருக்கலாம்...... நீ வறயாடா?"

ரகுவால் பதில் சொல்லவும் முடியவில்லை. சொல்லாவிட்டாலும் மணி விடுபவனாயில்லை. "நான் வரல்லேடா" என்றான் மெதுவாக.

"ஏண்டா?..என் மேலே ஏதாவது கோபமா?" என்று இழுத்தான் மணி.

"இல்லேடா,..எங்களைப்போல ஏழைகளெல்லாம் கோபப்பட்டு என்னடா நடக்கும்? நீ பணக்கார வீட்டுப் பையன்; உனக்கு நினைச்சது நடக்கும்."

"ஏண்டா ரகு, என்னமோ பணம், கிணம்னு பேத்தறயே... எங்கப்பா எங்கே பணம் வைச்சிருக்காருன்னு எனக்குத் தெரியவேயில்லையேடா. தெரிஞ்சா, நமக்கு எவ்வளவு பணம் வேணுமோ, அவ்வளவும் கொண்டு வந்துடுவேண்டா. எனக்கு என்னமோ இந்தச் சில்க் சட்டையே 'கம்ப்ளீட்டா' பிடிக்கல்லேடா. சுத்த 'நீயூசன்ஸ்'டா?"

ரகுவுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை. பதில் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டான்.

வழக்கமாக வாங்கும் சாதாரணச் சட்டைக்குக்கூட இன்று வரை ஒருவித வழியும் ஏற்படவில்லை என்பதை நினைக்க நினைக்க, அவனுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.



டாக்டர்: தம்பி, உன் உடம்பு சூடாப் போச்சு....அதனால் இனி மேல் சூடான பொருளாச் சாப்பிடாதே....

தம்பி: சரிதான், டாக்டர்.... இனிமே ஆற வைச்சுச் சாப்பிடறேன்.

---

"ரகு! எங்கப்பா பணம் மாத்திரம் எங்கே வச்சிருக்கார்னு தெரியட்டும்; வேணுங்கற பணம் கொண்டுவரேண்டா. அப்போ நீயும் என்னைப் போல் சில்க் சட்டையெல்லாம் தைச்சுக்கலாண்டா. நீ அழாமே வீட்டுக்குப் போ. நான் பாத்துக்கறேன்" என்று கூறிகொண்டே சென்றான் மணி.

* * *

ரகுவும் மணியும் இணைபிரியாத சிநேகிதர்கள். உடல் இரண்டே தவிர உயிர் ஒன்றுதான். ரகுவுக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் மணியிடம் கூறி ஆறுதலடைவான். மணியும் அதேமாதிரிதான். அவ்வளவு நெருங்கிய அன்பு அவர்களைப் பிணைத்து வைத்திருந்தது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்: அதுதான் - ரகு ஏழை; மணி பணக்காரன். பிஞ்சு நெஞ்சங்களிலே ஒட்டிக்கொண்டிருந்த அந்த அன்புக் கயிறு எந்தக் காலத்திலும் பிரிக்க முடியாத அளவுக்கு வலுவடைந்துவிட்டது.

ரகுவினுடைய தகப்பனார் மணியினுடைய தந்தையிடம் குமாஸ்தா வேலை பார்த்துவந்தார். நான்கு பேர்கள் அடங்கிய அந்தச் சிறு குடும்பத்தைக் கஷ்டமில்லாமல் நடத்துவதற்கு வேண்டிய சம்பளத்தை மணியினுடைய தந்தை, ரகுவின் தந்தைக்குக் கொடுத்து வந்தார். ரகுவினுடைய தந்தையும் நேர்மையாகவும் விசுவாசத்தோடும் உழைத்துவந்தார். மணியின் தகப்பனருக்கு அவரிடத்தில் அதிக அன்பு ஏற்பட்டது. என்ன இருந்தாலும் ரகுவின் தகப்பனார் தம்மிடம் வேலை செய்து பிழைக்கும் குமாஸ்தாதானே என்ற எண்ணம் அவர் மனத்தைவிட்டு அகல மறுத்தது.

ரகுவும் மணியும் நெருங்கிப் பழகுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். 'ஆனால் இந்த நட்பு ஏதாவது விபரீதத்திற்குக் காரணமாகிவிடப்போகிறதே' என்று ரகுவை அடிக்கடி எச்சரிப்பார். ஆனால் நெஞ்சத்தோடு நெஞ்சமாக, உயிரோடு உயிராகச் சேர்ந்துவிட்ட அந்த இளம் உள்ளங்கள் அவருடைய கட்டுப்பாட்டை லட்சியமா செய்யப் போகின்றன?

* * *

ரகு வீட்டின் கூடத்தில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தான்.

வாசலில் மணியின் குரல் கேட்டது: "டேய் ரகு! சீக்கிரம் வாடா."

"இதோ வர்றேண்டா" என்று கத்திக்கொண்டே வாசலுக்கு ஓடினான் ரகு.

"ரகு! நமக்கு இன்னிக்கு ரொம்ப அதிர்ஷ்டம்டா, இதோ பாத்தியா!"

"ஏதுடா, இவ்வளவு பணம்?"

"அதை விட்டுத் தள்ளுடா. வாடா, கடைக்குப் போகலாம்."

"கடைக்கு எதுக்குடா?"

"அதுதான். உனக்குச் சில்க் சட்டை தைச்சுக்கத்தாண்டா."

"உங்கப்பாவுக்குத் தெரிஞ்சா என்னடா செய்யறது? எனக்குப் பயமாயிருக்குடா."

"சரி, சரி" என்று கூறிக்கொண்டே மணி ரகுவின் கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டு கடைத்தெருவை நோக்கி நடந்தான்.

ஒரு கடைக்கு நாலு கடையாக நுழைந்து, கடைசியாக ஒரு கடையில் ஏகப்பட்ட அமர்க்களத்



துடன் சட்டைத்துணியை வாங்கிக்கொண்டு வெளியேறினார்கள். சட்டையைத் தைக்க அளவு கொடுத்துவிட்டு அவசர அவசரமாக வீட்டிற்கு ஓடினார்கள். மணியை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டுப் போகலாம் என்று எண்ணினான் ரகு.

மணியின் வீட்டில் ஏதோ கூச்சலாக இருந்தது. மணி கவனிக்காமல் உள்ளே சென்றுவிட்டான். அதில் தன்னுடைய தகப்பனாரின் குரலும் சேர்ந்து அடிபடுவதைக் கேட்ட ரகு திடுக்கிட்டான். மெதுவாக அடி மேல் அடிவைத்துச் சண்டை நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

"என்ன ஐயா இது, மேஜை மேல் வைத்திருந்த நூறு ரூபாய் நோட்டு அதற்குள்ளே எங்கே ஐயா, போய் விடும்? நீர்தானே ஐயா இங்கே இருந்தீர்?"

"இல்லை, ஸார்! நான் என்னுடைய வேலை மும்முரத்தில் தாங்கள் வந்ததைக்கூடக் கவனிக்கவில்லை. நான் அதைப் பார்க்கவேயில்லை."

"சரி, சரி. நூறு ரூபாய் எனக்குப் பிரமாதமில்லை....நேர்மை தான் எனக்கு முக்கியம். இவ்வளவு தான் நான் கூற முடியும்.." என்று கடுமையான குரலில் கூறினார் மணியின் தந்தை.

இதையெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த ரகுவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

'தீபாவளிக்கு நல்ல பரிசு தருவார்..சந்தோஷமாகக் குழந்தைகளுடன் தீபாவளியைக் கொண்டாடலாம்' என்றிருந்த ரகுவின் தந்தைக்கு இந்த நிகழ்ச்சி பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. தீபாவளிக்குப் புதிய துணிகள் ஒன்றும் வாங்கவில்லையென்றால் குழந்தைகள் மனம் எவ்வளவு புண்படும் என்பதை நினைக்க நினைக்க அவர் கண்களில் நீர் மல்கியது.

இந்தச் சமயத்தில்தான் மணி அவ்விடம் வந்து சேர்ந்தான்.. "என்னடா ரகு, நீ இன்னமும் வீட்டிற்குப் போகல்லே? ஏண்டா அழுறே?" என்று அவனருகில் செல்ல முயன்றான். ரகு அழுது கொண்டே உள் பக்கம் கையைக் காட்டினான். அவனால் பேச முடியவில்லை. உள்ளே நுழைந்த மணி அவர்கள் பேச்சிலிருந்து விஷயத்தைப் புரிந்துகொண்டான்.

"அவர் எடுக்கல்லேப்பா..நான் தான் உனக்குத் தெரியாமே,



**பையன்:** மாமா, நானும் என் நண்பனும் கால் பரீட்சையிலே கணக்கிலே மார்க்கு ஒண்ணு வாங்கியிருக்கோம்!

**மாமா:** எவ்வளவுடா?

**பையன்:** அதான் சொன்னனே மாமா, ஒண்ணுன்னு.

—N. K. **தேவராஜ்**




மேஜைமேலேயிருந்து எடுத்துண்டு போனேன்..நீ என்னமோ அவரைப் பிடிச்சுண்டு பிரமாதமாகச் சந்தேகப் படறியே" என்றான் மணி.

"நீயா எடுத்தே? அட பாவி.. நீ ஏண்டா எங்கிட்டே சொல்லாமல் பணத்தை எடுத்தே?" என்றார் மணியின் தந்தை, ஆத்திரம் நிறைந்த குரலில்.

"பின்னே என்னப்பா.. நம்பள்ளாம் சில்க் சட்டை போட்டுண்டிருக்கச்சே ரகுவெல்லாம் சாதாரணச் சட்டை போட்டுண்டிருக்கறதாப்பா? அதுக்குத்தான் நான் இந்தப் பணத்தை எடுத்துண்டு போய் வாங்கிக்கொடுத்தேன். இன்னிக்குக் கார்த்தாலே இந்தப் பக்கம் நான் வர்றச்சே நூறு ரூபாய் நோட்டு மேஜை மேலே இருந்தது. எடுத்துண்டு போய், சில்க் சட்டை கூட வாங்கியாச்சு" என்றான் மணி.

"அந்தப் பணத்தை ரகுவின் அப்பாவுக்குத்தான் கொடுக்கலாம் என்று நினைத்து எடுத்து வச்சேன். அதுக்குள்ளே அது திருட்டுப் போயிடுத்தேன்னு வருத்தத்தாலே தான் கோபம் வந்தது" என்று மணியின் தகப்பனார் வருத்தத்தோடு சொன்னார்.

"கணக்கப்பிள்ளை ... நடந்ததையெல்லாம் மறந்துடுங்க..இந்தாங்க இன்னொரு நூறு ரூபாய்! தீபாவளிச் செலவுக்கு வச்சுக்குங்க.. சாயந்தர வண்டியிலே மாப்பிள்ளை வர்றதா எழுதியிருக்கிறாரு. வண்டி கட்டிக்கிட்டு ஸ்டேஷனுக்குப் போய் அவரை அழைச்சிட்டு வாங்க. மற்றக் காரியங்களை அப்புறம் கவனிக்கலாம்" என்று கூறி மற்றொரு நூறு ரூபாயைக் கொடுத்தார்.

"நீங்கள் நல்லாயிருக்கணும்.. உங்க மனசு எவ்வளவு நல்ல மனசு!"

கள்ளமில்லாப் பிஞ்சு நெஞ்சின் காணிக்கையாக வந்த நூறு ரூபாய் அவரைப் பார்த்து ஆறுதல் கூறியது.

# தங்க ரோஜா

தங்கமணி

"அண்ணா, உன்னுடைய சிந்தனையும் சீர்திருத்தமும் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவே இல்லை, அண்ணா!" என்றாள் ஆனந்தி. காந்தி அவளைப் உற்றுப் பார்த்துச் சிரித்தான்.

"ஆனந்தி, எல்லோருக்கும் பிடித்தது மாதிரி யாராலும் எதையுமே செய்ய முடியாதே! உதாரணம்: உலகத்துக்கே பிடித்த காந்தியண்ணலின் கொள்கைகூட ஒரு கொடிய பாவிக்குப் பிடிக்கவில்லை."

"அண்ணா, நீ என்னதான் வாதாடினாலும் சரி, செந்தாமரை சேற்றிலேதான் உதித்தது என்பதற்காக யாரும் செந்தாமரைகளுக்கு நடுவில் சேற்றை அள்ளி வைக்க ஒப்பமாட்டார்கள்!" என்று ஓங்கி அடித்துப் பேசினாள் ஆனந்தி.

"ஆனந்தி, நல்லவர்கள் ஒப்பும் இந்த உண்மையை உன்னால் புரிந்துகொள்ள முடியாதுதான்!"

"ஆமாம், அண்ணா! தான் பைத்தியக்காரன் என்ற உண்மையை ஒப்பும் அறிவு, எந்தப் பைத்தியக்காரனுக்கும் கிடையாதுதான்!" என்று குத்தலாகச் சொன்னாள் ஆனந்தி.

இதற்குள் 'கணகண'வென்று மணியடித்தது. அத்துடன், அண்ணனும் தங்கையும் பள்ளிக்குள் பறந்தோடினார்கள்.

* * *

சில நாட்களுக்கு முன்..

காற்றில் மிதக்கும் கண்ணறியாக் கிருமிகளைத் தின்று உயிர் வாழும் தும்பிபோல், குப்பைத் தொட்டிக் கழிவுப் பொருள்களை விழுங்கி வயிறு வளர்த்து வந்தான், நந்தன் என்னும் ஒரு சிறுவன். அவனை எங்கேயோ சந்தித்து, என்னவோ பேசி வீட்டுக்கு அழைத்து வந்தான் காந்தி. அப்பாவிடம் அவனைப்பற்றிக் கூறினான். அவனைச் சமையல்காரக் கிழவனாருக்கு உதவியாக ஏற்று ஆதரிக்கும்படி கெஞ்சினான். அப்பாவும் அவன் வேண்டுகோளுக்கு இணங்கினார்.

இதுதான் ஆனந்திக்குப் பிடிக்கவில்லை! எச்சில் இலை விழுங்கும் பிச்சைக்கார ஜந்து, பங்களாவில் நடமாடுவதைக் காணக் காண, அவளுக்கு மனசைக் குமட்டியது! உயிரையே குமட்டியது!

* * *

இரண்டு தினங்களுக்குப் பின் காலை பத்து மணி. நீதி மன்றத்துக்குக் கிளம்பின அப்பா, வாசலுக்கு வந்ததும் என்ன நினைத்துக்கொண்டாரோ! "அடே.. காந்தி!" என்றார்.

உள்ளேயிருந்து ஓடோடி வந்தான் காந்தி. "என்ன அப்பா?"

"தங்கரோஜாவை எடுத்து வா, சீக்கிரம்."

காந்தி உள்ளே ஓடினான். சில நிமிஷங்களுக்குள், ஓடிய வேகத்

தில் மறுபடியும் வந்தான். "அப்பா, அதைக் காணவில்லை!"

"ஆ!.."

அவர் பதைபதைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தார். அவர் உள்ளம் நடுங்கியது, குண்டடிபட்ட கொக்கைப் போல்!

சில ஆண்டுகளுக்கு முன்..

குழப்பம் நிறைந்த ஒரு வழக்கு. வழக்கறிஞரான மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு காந்தியின் அப்பாவுக்கு அதுதான் முதல் வழக்கு. அந்த வழக்கில் காந்தியின் அப்பா மிகத் திறமையாக வாதாடினார்; வெற்றியும் பெற்றார். கட்சிக்காரர் அதற்காக மெச்சி நகாசுவேலை செய்த சின்னஞ் சிறு தங்கரோஜா ஒன்றைப் பரிசாக



வழங்கினர். பத்துக் குன்றிமணி எடை அளவுள்ள தங்கந்தான்; என்றாலும், பழகிய பொருள் பறி போயிற்று என்றால், யாருக்குத் தான் உள்ளம் தடுமாறாது?

எங்கெல்லாமோ தேடினர். தங்க ரோஜா கிடைக்கவில்லை. காந்தி ஓடிப்போய் ஆனந்தியை அழைத்து வந்தான். அப்பா விசாரித்தார். முதலில் ஆனந்தி நடுங்கினாள். என்றாலும் சமாளித்துக்கொண்டு, "அப்பா, நேற்றிரவு எழு மணிக்கு உங்கள் அறைக்குள் நந்தன்தான் இருந்தான். நிச்சயமாக அவன் தான் எடுத்திருப்பான்" என்றாள்.

"சரி. அவன் எங்கே?" என்று கேட்டார் அப்பா. சமையல்காரக் கிழவன் வந்து, "காய்கறி வாங்கி வரப் போயிருக்கிறான்" என்றான்.

"சரி, வந்ததும் அவனைப் பிடித்து வையுங்கள். சாயங்காலம் வந்தவுடன் கவனிக்கிறேன்." அப்பா, அவசரம் அவசரமாக நீதி மன்றத்துக்குக் கிளம்பிச் சென்றார். அவர் சென்றவுடனே ஆனந்தியை உறுத்துப் பார்த்து, "ஆனந்தி, தங்கரோஜாவை நந்தன் எடுத்தான் என்பது உண்மையா?" என்று கேட்டான் காந்தி.

"தங்கரோஜாவை நந்தன் எடுக்கவில்லை; ஆனால், திருடினான்! இது உண்மை! உண்மை! உண்மை!" என்றாள் ஆனந்தி.

"திரும்பத் திரும்ப ஆயிரம் தடவைகள் கூறினாலும், பொய் உண்மை ஆகிவிடாது, ஆனந்தி!"

ஆனந்திக்கு ஆத்திரம் வந்து விட்டது! "அண்ணா, 'ஜாதிக் கேற்ற புத்தி' என்னும் பழமொழியை நந்தனால் பொய்யாக்கி விட முடியாது, அண்ணா!"

"ஜாதியைச் சொல்லி ஒருவனைக் குற்றவாளி ஆக்காதே, ஆனந்தி." மேலே பேசுவதற்குள் காந்திக்குச் சட்டென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

ஆனந்திக்கும் காந்திக்கும் ஓர் அண்ணன் இருந்தான். அவன் முரடன், அப்பாவின் பெட்டியிலிருந்து எத்தனையோ தடவைகள் சுளை சுளையாக ரூபாயைக் கொள்ளையடித்திருக்கிறான். ஒரு நாள் சோம்பேறிப் பையன்களுடன் சேர்ந்துகொண்டு பம்பாய்க்குச் சென்றான். கடைசியில் மாய்ந்தும் ஒழிந்தான்!..

இத்தகைய கொடிய சகோதரனின் நினைவு வந்ததும், "ஆனந்தி, நம்முடைய அண்ணன் கூடச் சோம்பேறிதான். கொள்ளைக்காரன். அதனால் நம்முடைய ஜாதியே சோம்பேறி ஜாதியா?"

சில விநாடிவரை மௌனமாய் நின்றபின், "அண்ணா, நந்தன் தான் திருடினான்! இது உண்மை. இதை மறைக்க முடியாது." வாக்கியத்தை முடிக்காமல் விர்ரென்று போய்விட்டாள் ஆனந்தி.

* * *

அன்று மாலை.

அப்பா வந்தார். காந்தியைக் காணோம். நந்தனையும் காணோம். ஆனந்தியைக் கூப்பிட்டார். "காந்தி எங்கே? நந்தன் எங்கே?" என்று கேட்டார்.

"நந்தனைத் தேடிக்கொண்டு காலையில் சென்ற காந்தியும் வரக் காணோம்; நந்தனும் தலை காட்டக் காணோம். ஒரு வேளை இரண்டு பேருமே சேர்ந்து தங்க ரோஜாவை.." என்று இழுத்தான் ஆனந்தி.



அப்பாவின் நெஞ்சம் வெம்பியது.

அந்தச் சமயத்திலே, "அப்பா!" என்று அழைத்துக்கொண்டே மாடிக்கு ஓடி வந்தான் காந்தி.

"என்னடா, காலையில் சென்றவன் இப்போதுதானா வருகிறாய்?"

"அப்பா, 'ஆசைக்காக எதையும் செய்யத் துணியும் அற்பத்தனமான மானிடர்கள்' என்று சொல்வது நிலையான உண்மை, அப்பா! அந்தத் திருட்டுப் பயல் நந்தன் என்னை என்ன பாடுபடுத்தி விட்டான்! 'அன்பு செய்தவருக்குத் துன்பம் செய்வதுதான் ஈன ஜாதியின் வழக்கம்' என்று ஆனந்தி அப்போதே என்னை எச்சரித்தாள்; நான்தான் அதை நம்பாமல் மோசம் போனேன்!" என்றான் காந்தி.

"அவன் எங்கேடா..?"

"பிடிக்கப் போன என்னைக் கன்னத்தில் அறைந்து விட்டு நந்தன் ஓடினான். கடைசியில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில், ஆசாமி என்னிடம் சிக்கினான். படாத பாடுபட்டு அவனைப் போலீஸில் ஒப்படைத்தேன். போலீஸ் ஸ்டேஷனில், அந்தத் துரோகிக்குச் சரியான உதை! மூக்கிலும் வாயிலும் ரத்தம் சொட்டச் சொட்ட அங்கே மொத்தி விட்டார்கள்! இன்னும் 'பட்டினி போட்டு வதக்குங்கள்' என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்."

இதைக் கேட்டதும் ஆனந்தியின் மண்டையிலே ஏதோ ஒன்று 'ஙங ஙங்' என்று இடிப்பது போலிருந்தது; மனத்துக்குள்ளே என்னவோ ஒன்று 'சுருக் சுருக்' கென்று குத்துவதுபோலிருந்தது! அவளால் நிற்கக்கூட இயலவில்லை; தள்ளாடினுள்.

* * *

அன்றிரவு. ஆனந்திக்குக் கடுமையான ஜுரம் வந்துவிட்டது. அவள் தோழி ஜானகி வந்து அவளுக்கு மருந்து கொடுத்து ஆறுதல் கூறினுள்.

மறு நாள் காலையில்தான் சிறிது தணிந்தது. பங்களா வராந்தாவில் இளம் வெயிலில், மெல்ல உலாவிக்கொண்டிருந்தாள் ஆனந்தி.

"காந்தி..."-ஒரு குரல்.

ஆனந்தி திரும்பிப் பார்த்தாள். வாசலில் யாரோ ஒரு பையன், சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு ஆனந்தியை நெருங்கினுன்.

"காந்தி இருக்கிருனு?"

"நீ யார்?"

"நான் திருவல்லிக்கேணியிலிருந்து வருகிறேன். என் அப்பா, திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர்!"

ஆனந்திக்கு மூளை குழம்பியது!

"காந்தியிடம் கொஞ்சம் பேச வேண்டும்."

"காந்தி பந்து விளையாடப் போயிருக்கிருன். நான் காந்தியின் தங்கை. என்னிடம் செய்தியைச் சொன்னுல் நான் அவனிடம் சொல்கிறேன்" என்ருள் ஆனந்தி.

அந்தப் பையன் சிறிது தயங்கிவிட்டுக் கூறினுன்; "அவன் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு வந்து ஒப்படைத்த கந்தன் என்னும் திருட்டுப் பையன் சாகக் கிடக்கிருன். இனிமேல் அவன் உயிர் பிழைக்க முடியாதாம். அவன்மீது வழக்கு எதுவும் பதிவு செய்யாமல், வெளியே எங்கேயாவது விரட்டிவிடலாம் என்று என் அப்பா காந்தியிடமும், அவன் அப்பா வக்கீலிடமும் சொல்லிவிட்டு வரச் சொன்னுர்..நான் போகிறேன்.." அந்த இன்ஸ்பெக்டர் மகன் சைக்கிளில் ஏறிக்கொண்டு விரைந்து மறைந்தான்!

ஆனந்திக்கு உலகமே சுழன்றது. அவள் சோர்ந்து மூர்ச்சையானுள்!

* * *

அன்றிரவு பன்னிரண்டு மணி.

துப்பட்டியால் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் முழுக்க முழுக்கப் போர்த்துக்கொண்டு, மாடிப்படியில் மெல்ல மெல்ல இறங்கி வந்தது, ஓர் உருவம்!

அந்த உருவம், காந்தியின் அறையை நெருங்கியது. கதவை மெல்லச் சப்தமின்றித் திறந்தது. உள்ளே நுழைந்தது. கட்டிலில் படுத்துறங்கிக்கொண்டிருந்த துப்பட்டியைக் களைந்துகொண்டே, "அண்ணு.." என்றது. அந்தக் குரலை உணர்ந்ததுமே சட்டென்று துள்ளி எழுந்தான் காந்தி.

"என்ன ஆனந்தி, தூக்கம் வரவில்லையா?" - காந்தி அன்புடன் கேட்டான். ஆனந்தி ஒன்றும்

பேசவில்லை; தேம்பித் தேம்பி அழுதாள். சட்டென்று காந்தியின் பாதத்தைத் தொட்டுக் கும்பிட்டுக் கதறினள். "அண்ணு! அன்பு உணர்ச்சியற்ற இந்தக் கல் நெஞ்சக்காரியை அன்பு செய்து மன்னித்துக்கொள், அண்ணு! நான் பாவி! மகா பாவி!" என்று புலம்பினுள்.

காந்தி சிரித்தான். அவளை அருகில் அமர்த்திக்கொண்டு, "நீ ஏன் பாவி ஆகிருய், ஆனந்தி?" என்று ஒன்றும் அறியாதவனைப் போல் கேட்டான்.

ஆனந்தி கொஞ்ச நேரம் அழுது விட்டுக் கூறினுள்: "அண்ணு, அப்பாவின் கோபத்துக்கு ஆளாகாமல் என்னைக் காப்பாற்று, அண்ணு! ஒரு பாவமும் அறியாத நந்தனின் உயிரைப் பலி வாங்கிய கொடும்பாவி நான்! அண்ணு, என்னை மன்னித்துக்கொள்!"

"என்ன சொல்லுகிருய், ஆனந்தி..?"

"அப்பாவின் தங்க ரோஜாவை நந்தன் திருடவும் இல்லை; எடுக்கவும் இல்லை; அவன் அதைப் பார்த்தே இருக்கமாட்டான்!.. அதை எடுத்தது நான்தான்! நான் தான் அண்ணு, அதை எடுத்தேன்!.. பாவம், நந்தனின்மீது அபாண்டமாய்ப் பழி சுமத்தினேன்!" முகத்தை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு கதறினுள் ஆனந்தி.

காந்தி சிரித்தான்: "ஆனந்தி, பிறர் சொல்லித் திருந்துவதைவிடத் தானே எண்ணித் திருந்துவதுதான் சிறப்பானது. அப்பாவின் தங்க ரோஜாவை எடுத்து, பம்பாய்க்குக் குடியேறிய உன் சிநேகிதிக்கு அதை நினைவுப் பரிசாகக் கொடுத்தது எனக்குத் தெரியும். உன் சிநேகிதி ஜானகி சொன்னுள்.."

"தங்க ரோஜாவை நான்தான் எடுத்தேன் என்பது தெரிந்துமா, நந்தனைப் போலீஸில் ஒப்படைத்து, சித்திரவதை செய்யச் செய்தாய்?"

"அப்படிச் செய்ய எனக்கு என்ன பைத்தியமா? நீ செய்த குற்றத்தாலேயே உன்னைத் தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், நானும் என் நண்பனும் உருவாக்கிய திட்டப்படி நடித்தோம்!" என்றுன் காந்தி.

"அப்படியானுல், நந்தன் எங்கே?"

"அவன் திருவல்லிக்கேணியில் நமது அத்தை வீட்டில் ஆனந்தமாக இருக்கிருன்!"

"அண்ணு! உன் அறிவையும் அன்பையும் தலை வணங்கிக் கும்பிடுகிறேன், அண்ணு!" என்று கண்ணீர் பெருக்கி விசித்தாள் ஆனந்தி.

"ஆனந்தி, பயப்படாதே. அப்பாவுக்கு அவ்வளவும் தெரியும்!"

"உண்மையாகவா, அண்ணு?"

"நான் உன்னைத் திருத்த நடத்திய இந்த நாடகத்துக்கு அப்பாதான் டைரக்டராக்கும்!" என்று கூறிச் சிரித்தான் காந்தி. ஆனந்தி கண்ணீர் மல்கும் கண்களால் தன் அருமையான அண்ணனைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

# திருடன் யார்?

**ஜோதிர்லதா கிரிஜா**

அம்மாவும் அப்பாவும் சமையலறையில் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைத் தற்செயலாகக் கவனிக்க நேர்ந்த பிறகு, அவர்கள் தன்னைப் பற்றி அவ்வளவு ரகசியமாக என்ன தான் பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதை ஒட்டுக் கேட்காமல் இருக்க ரமணனால் முடியவில்லை.

"என்டி! நீ என்ன, 'ரமணன் எடுத்திருக்க மாட்டான்; ரமணன் எடுத்திருக்க மாட்டான்' என்பதையே திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டிருக்கிறாயே! நான் சொல்வது புரியவில்லையா?

"என் மேஜையறையில் தான் வடகிழக்கு மூலைப்பக்கம் வைத்தேன். நன்றாக நினைவில் இருக்கிறது. நேற்று இரவு எழு மணிக்கு வைத்ததை இன்றைக்குக் காலையில் காணவில்லை என்றால், என்ன அர்த்தம்? இவனைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் இங்கே பணத்தைத் திருட?"

"குழந்தை தெரியாத்தனமாக எப்போதோ ஒரு ரூபாயை எடுத்துவிட்டான் என்பதற்காக எந்தக் குற்றத்தையும் அவன் தலையிலேயே போட்டு விடுவதா?"

"அதென்னமோ, கோமு! நீ வர வர அவனுக்கு ரொம்பப் பரிந்துகொண்டு வருகிறாய்! செல்லம் கொடுத்து வளர்த்தால் அப்புறம் அவன் உருப்படவே மாட்டான்! அவனைப் பிடித்து உயிர் உண்டு, இல்லை என்று நொறுக்கினாலொழியத் தவற்றை ஒப்புக்கொள்ள மாட்டான்!"



"அது உங்கள் வயிற்றில் எதற்காகப் பிறந்திருக்கிறது? அந்தப் பிள்ளை சுகப்படவா பிறந்தது? அடியுங்கள், மிதியுங்கள், என்ன வேண்டுமானாலும் பண்ணுங்கள், யார் இருக்கிறார்கள் கேட்க? அடியினால் குழந்தைகளைத் திருத்திவிட முடியுமென்றால், உலகத்திலுள்ள குழந்தைகள் எல்லாம் தெய்வங்களாகிவிடுவார்களே!"

'அம்மாவுக்கு இருக்கும் அன்பில் பாதிகூட இந்த அப்பாவுக்கு இல்லையே!' அதற்கு மேலும் அங்கே நின்றுகொண்டிருக்கப் பிடிக்காமல், ரமணன் தன்னறையை அடைந்து பித்துப் பிடித்தவன் போல் எதையோ வெறித்துப் பார்த்தவாறு கல்லாய்ச் சமைந்திருந்தான். 'தட தட'வென்ற



காலடி யோசையைக் கேட்டதும், சிந்தனையிலிருந்து விடுபட்டவனாக ரமணன் தன் இருப்பிடத்தில், கைகால்கள் நடுக்கமெடுக்க எழுந்திருந்து நின்றான்.

வாசற்படியைத் தாண்டி உள்ளே நுழைந்த சுந்தரம், "ரமணா! நேற்று இரவு என் மேஜை யறையிலிருந்து எடுத்தாயே, அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்து விடு! செலவுக்கு வேண்டியிருக்கிறது" என்று அமைதியாகக் கேட்டார்.

"எந்தப் பத்து ரூபாய்?" என்று ரமணன் செத்துக்கொண்டிருப்பவனுக்குரிய குரலில் கேட்டான். இப்படி அவன் கேட்டதும் சுந்தரத்தின் மூக்கு நுனி 'சிவுக்'கென்று மாதுளை முத்தாய்ச் சிவந்தது. அதுவரை வெகு சிரமப்பட்டு அவர் அடக்கிக் கொண்டிருந்த கோப வெள்ளம் அதன் அணையைத் தகர்த்துக் கொண்டு புறப்பட்டது.

"என்னடா நடிக்கிறாய்? சமையலறைக் கதவுக்குப் பக்கத்தில் நின்று எல்லாவற்றையம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, 'எந்தப் பத்து ரூபாய்?' என்றா கேட்கிறாய்? திருட்டு நாயே! கொன்று விடுகிறேன் பார்! அடிவாங்காமல் கொடுத்துவிடு."

"சத்தியமாய் நான் எடுக்கவே இல்லை, அப்பா!"

"இனிமேல் அடித்தாலொழிய நீ ஒப்புக்கொள்ளப் போகிறதில்லை. இரு, வருகிறேன்!"

சுந்தரம் தம் தடியை எடுத்துவரக் கூடத்துக்குச் சென்றார். இதற்குள் அறை வாசற்படியருகே வந்து நின்ற கோமதி, "ரமணா! ஏண்டாப்பா நீ இப்படிப்

புத்தியில்லாமல் நடந்துகொள்ளுகிறாய்? பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்து விடடாப்பா! அடி வாங்கிச் சாகாதே! நீ வாங்குகிற ஒவ்வோர் அடியும் என்மேல் விழுகிற மாதிரியல்லவா இருக்கிறது?" என்று புத்தி சொன்னாள். ரமணனின் கண்களில் கண்ணீர் பீறிட்டது. "கடவுளுக்குப் பொதுவாக நான் அந்தப் பத்து ரூபாயைக் கண்ணால்கூடப் பார்க்கவில்லை, அம்மா!" என்றான்.

"முந்தி ஒரு தரம் திருடிவிட்டு அடி அடி என்று அடித்து நொறுக்கின அப்புறந்தானே, 'ஆமாம்' என்று ஒப்புக்கொண்டாய்? நீ 'எடுக்கவில்லை' என்று சொல்லுவதை எப்படி நாங்கள் நம்புவது?"

ரமணனுடைய சிந்தனைத் திரையில் கடந்த கால நிகழ்ச்சிப் படங்கள் நிழலாட்டம் ஆடின.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முந்தி ஒரு நாள். ரமணன் காலையில் பள்ளிக்கூடம் போவதற்காகக் கிளம்பிக்கொண்டிருந்தான். அவனுடைய அண்ணா கிருஷ்ணமூர்த்தி, அவனுக்கு முன்னாலேயே பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டிருந்தான். புத்தகப் பையைத் தோளில் மாட்டியபடி அவன் ரேழியறையைத் தாண்டிச் சென்றபோது, அவன் கண்கள் தற்செயலாக அப்பாவின் மேஜைமேல் இருந்த ஒரு ரூபாய் நாணயத்தின்மீது பதிந்தன. அவனுடைய போதாத வேளை; அந்த ரூபாயைச் சடக்கென்று எடுத்துத் தன் பைக்குள் போட்டுக்கொண்டான். அவன் அதை எடுத்துக்கொண்டதற்குக் காரணம், 'திருடவேண்டும்' என்ற நினைப்பு இல்லை. குழந்தைகள் நடமாட்டமுள்ள இடத்தில், அஜாக்கிரதையாகச் சுந்தரம் ஒரு ரூபாயைப் போட்டுவிட்டுச் சென்றதுதான்!

ரமணனுடைய பெற்றோர்கள் குழந்தைகள் கண்ணில் காசையே காட்டமாட்டார்கள். காசு கொடுத்துப் பழக்கிவிட்டால், பிறகு குழந்தைகள் அதன் அருமை தெரியாதவர்களாகிவிடுவார்கள் என்பதுதான் அவர்கள் கருத்து; கருமிகள் அல்ல!

வகுப்பு மாணவர்களில், எத்தனையோ பேர் பையில் எப்போதும் காசு குலுங்கும் ஓசையை ரமணன் கேட்டிருக்கிறான் அவன். தற்செயலாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு ரூபாய் அவன் உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில்

**சேர்த்துப் பாருங்கள்**



ஜே. பி. லக்ஷ்மி, திருவனந்தபுரம்

என்றே புதைந்து விட்ட ஆசையைக் கிளறி விட்டுவிட்டது.



அன்று மாலை ரமணனும் கிருஷ்ணமூர்த்தியும் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்ததும், சுந்தரம் வழக்கம் போல் வெளியே உலாவப் போகாமல் வீட்டில் இருப்பதைப் பார்த்தார்கள். கிருஷ்ணமூர்த்தி அதைப்பற்றி எதும் குறிப்பாகப்பாராட்டவில்லை. ஆனால் ரமணனின் நெஞ்சம் குறுகுறுவென்றது. குற்றம் புரிந்த நெஞ்சம்!

இரண்டு பிள்ளைகளும் கூடத்துக்கு வந்ததும் சுந்தரம், "இங்கே வாருங்கள்!" என்றார். அவருடைய குரலில் இருந்த கடுமையைக் கவனித்த இருவருக்கும் வயிறு கலங்கியது. முதலில் கிருஷ்ணமூர்த்தியைக் கேட்டார். இல்லவே இல்லை என்று அவன் சாதித்தான். அடுத்தபடியாக, ரமணனைக் கேட்டார். அவன், தான் ரூபாயைக் கண்ணால்கூட பார்க்கவில்லை என்று ஒரே போடாகப் போட்டுவிட்டான். ஆனால் கிருஷ்ணமூர்த்தி, தான் ஹோட்டலில் ரமணனைப் பார்த்ததாகச் சொல்லிவிட்டான். உடனே சுந்தரம் ரமணனை நன்றாக அடித்த பிறகுதான் ரமணன் ஒப்புக்கொண்டான்....

சுந்தரம் கைப்பிரம்பை வீசியபடி ரமணனை நெருங்கினார். முரட்டுத்தனமாக அவர் அடிக்கப் போவதைக் கண்கொண்டு பார்க்கப் பிடிக்காதவளாய்க் கோமதி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

ரமணன், "ஐயோ ஐயோ!" என்று அலறத் தொடங்கினான். ஆனால் சுந்தரம் அவனை விடவில்லை.

"டேய்! இனிமேலும் நீ உள்ளதைச் சொல்லாமல் இருந்தால், சூடே போட்டுவிடுவேன்.... ஏய் கோமதி! அடுப்பை மூட்டி இரும்புக் கரண்டியைக் காயப் போடு, சொல்லுகிறேன்!" என்றார்.

இதற்குள் சுந்தரம், ரமணனுடைய அலமாரியைச் சோதித்துப் பார்க்கத் தொடங்கினார். இந்தச் சமயத்தில், அவனுடைய அண்ணா கிருஷ்ணமூர்த்தி, டியூஷன்

வாத்தியார் வீட்டுக்குப் போயிருந்தவன், திரும்பி வந்தான். அழுத கண்ணும் சிந்தின மூக்குமாய் நின்றுகொண்டிருந்த தம்பியின் மேல் அவனுக்குக் கொஞ்சம் இரக்கம் பிறந்தது. விஷயத்தை அம்மாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டபின் அவன் நேரே தன்னறைக்குச் சென்றான்.

சுந்தரம், "பார்த்தாயாடி? உன் பிள்ளை பத்து ரூபாய்க்கு ஒரு புதுப் பேனா வாங்கியிருக்கிறான்!" என்று, கணக்கு நோட்டில் செருகி வைக்கப்பட்டிருந்த பேனாவை எடுத்துப் பார்த்துக் கொண்டே கத்தினார். அதை எடுத்தபொழுது, அவர் நோட்டின் அந்தப் பக்கத்தில் அகன்ற வாய்க்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த பெரிய பற்களுள்ள ஓர் அழகற்ற முகம் வரையப்பட்டிருந்தது. அதற்குக் கீழே 'கணக்கு வாத்தியார் இவர் தான்' என்று எழுதியிருந்ததைப் பார்த்தார். 'அதைப்பற்றிப் பிறகு கண்டித்துக்கொள்ளலாம்' என்று எண்ணியவராய், "இந்தப் பேனா என்ன விலைடா? நீதானே வாங்கினாய்?" என்று ரமணனை மிரட்டினார்.

"இல்லையப்பா!"

சுந்தரம் அவன் கையைப் பிடித்துத் தர தரவென்று சமையலறைக்குச் சூடுபோட இழுத்துச் சென்றார். ரமணன் விம்மி விம்மி அழுதுகொண்டே இருந்தான். இந்த அமர்க்களம் அடுக்களையில் நடந்துகொண்டிருந்தபொழுது கிருஷ்ணமூர்த்தி, "அப்பா! பத்து ரூபாய் நோட்டு அகப்பட்டு விட்டது. ரமணனின் கணக்கு நோட்டில் இருந்தது" என்று சமையலறையினுள் நுழைந்தான்.

சுந்தரம் கணக்கு நோட்டைக் கையில் வாங்கிப் புரட்டினார். கணக்கு வாத்தியாரின் கேலிப் படம் வரையப்பட்டிருந்த பக்கத்தில் நோட்டு இருந்தது!

"இங்கேயா இருந்தது?"

"ஆமாமப்பா! வாத்தியார் படம் போட்டிருக்கிறதே, இதே பக்கத்தில்தான் இருந்தது!"

"ஏண்டா, திருட்டு நாயே! நான் பார்த்தபோது இல்லையேடா? நீ எடுத்துவிட்டு, மெதுவாக அவனுடைய நோட்டில் வைத்துவிட்டாயோ? தப்பிதஞ் செய்யாதவனைப் போட்டுச் சாகடித்துவிட்டேனேடா, பாவி!"

சுந்தரம் முன்னைவிட அதிக ஆத்திரத்துடன் கிருஷ்ண மூர்த்தியை அடித்தார். அப்பாவின் கழிவிரக்கம் மிக்க சொற்கள் ரமணனின் வலியையெல்லாம் மறக்கச் செய்தன. இந்தச் சமயத்தில், ஒரு பையன் வீட்டு வாசலில் நின்றபடியே ரமணனைப் பேர் சொல்லி அழைத்தான். ரமணன் அழுத கண்ணும் வீங்கிய கன்னமுமாக இருந்ததால், கோமதியே வாசலுக்குப் போய் என்னவென்று கேட்டாள்.

"வேறொன்றும் இல்லை! ரமணனிடம் சேற்றுப் பாடம் எழுதுவதற்காக என் புதுப் பேனாவைக் கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டு போவதற்காகத்தான் வந்தேன்" என்றான் தாசில்தார் பிள்ளை மாசிலாமணி.



# பத்தாவது முட்டாள்

**'தம்பி'**

பீர்பால் யோசனையில் ஆழ்ந்திருந்த அக்பரை நெருங்கி, விஷயம் என்ன என்று விசாரித்தான்.

''நான் கல்வியறிவை வளர்க்க எவ்வளவோ பாடு பட்டும், இந்த நகரில் முட்டாள்களின் ஜனத் தொகை குறையவில்லையே!'' என்று தம் வருத்தத்தை அக்பர் வெளியிட்டார்.

''பிரபோ! ஒரே நாளில் அவர்கள் மறைந்துவிடுவார்களா? உலகில் என்றுமே, எங்குமே அறிஞர்கள் தொகை குறைவுதான். அறிவில்லாதவர் தொகைதான் அதிகம்'' என்றான் பீர்பால்.

சிறிது நேரம் யோசித்து அக்பர், ''பீர்பால், எனக்காக நீ ஏழு நாளைக்கு டில்லியைச் சுற்றி வா. நல்ல—சிறந்த—முட்டாள்களாகப் பத்துப் பேரைக் கண்டு பிடி. அவர்களுடன் இன்றைக்கு எட்டாம் நாள் சந்திக்கலாம்.''

இந்த விசித்திரக் கட்டளையைக் கேட்ட பீர்பால் அடுத்த கணம், ''சரி, அவ்வாறே செய்கிறேன், பிரபோ!'' என்று சொல்லிக் கிளம்பினான்.

மறுநாள் காலை முதல் பீர்பால் 'பரம முட்டாள்'களைத் தேடிக் கொண்டே சென்றான். அப்போது ஒரு குட்டையில் ஒருவன் விழுந்து கிடப்பதைக் கண்டான். அவன், ''ஐயா! என்னை வெளியே தூக்கி விடுங்களேன்!'' என்று கதறினான். அந்தக் குட்டை அதிக ஆழம் இல்லை. கொஞ்சம் கையை ஊன்றிக்கொண்டு எழுந்தால் விழுந்தவன் எழுந்துவிடலாம். ஆனால் அவன் தன் கை இரண்டை



யும் பக்கவாட்டில் அகலமாக நீட்டிக்கொண்டிருந்தான். பீர்பால் அவனைப் பிடித்துத் தூக்கப்போனான்.

''என் கைகளைத் தொடாதே. தலையைப் பிடித்துத் தூக்கு!'' என்று கத்தினான், குட்டையில் விழுந்தவன். பீர்பால் அவ்வாறே செய்தான். ''ஏனப்பா? உன் கையில் என்ன, முடக்குவாதமா?'' என்று கேட்டான்.

''நன்றாய்ச் சொன்னீர்! என் நண்பன் வீட்டில் ஒரு பெரிய பெட்டி செய்திருக்கிறான். அதே அளவில் நானும் ஒன்று செய்ய அவன் பெட்டியின் அளவை என் கையால் அளந்தேன். அப்படியே தச்சன் வீட்டுக்குக் கிளம்பினேன். வழியில் இங்கே விழுந்து விட்டேன். இப்போது தச்சன் வீட்டுக்குப் போகிறேன்'' என்று சொல்லி, தன் கைகளை நீட்டிப் பிடித்தபடி நடந்து சென்றான். பீர்பால் அவன் கூடச் சென்று அவன் பெயரையும் விலாசத்தையும் குறித்துக் கொண்டான்.

அடுத்த நாள் பீர்பால் உலாவச் சென்றபோது, சாலையில் ஒரு குதிரை மேல் நல்ல குடியானவன் ஒருவன் தன் தலை மேல் ஒரு கட்டுப் புல் சுமையைத் தூக்கியபடி சவாரி செய்தான்.

பீர்பால் அவனை நிறுத்தி, ''ஏனப்பா, சவாரிசெய்தபடியே உன் தலையில் புல்சுமையைச் சுமக்கிறாய்?'' என்று கேட்டான்.

''நன்றாய்ச் சொன்னீர், ஐயா! இந்தக் குதிரைஎவ்வளவு இளைத்திருக்கிறது! இது என்னைத் தாங்குவதே கஷ்டம். அதோடு இந்தப் புல்கட்டையும் சேர்த்துத் தாங்குமா? அதனால் தான் தலையில் **நான்** சுமந்துகொண்டிருக்கிறேன்'' என்றான் அவன்.

பீர்பால் புன்னகை புரிந்தான். குடியானவனின் விலாசத்தையும் குறித்துக் கொண்டான்.

மறுநாள் பீர்பால் வழியே எதிரே ஒருவன் வேகமாக ஓடி வந்தான். பீர்பால்மீது மோதிக் கொண்டான்.

''எதற்காக இப்படித் தலை தெறிக்க ஓடி மோதுகிறாய்?'' என்று கேட்டான்.

''ஐயோ, காரியத்தைக் கெடுத்து விட்டாயே!'' என்று அலறினான் ஓடியவன்.

பீர்பால் தூண்டி விசாரித்த போது அவன், ''நானும் என் நண்பனும் ஒரு பந்தயத்தில் யார் குரல் உரக்க, வெகுதூரம் கேட்கிறது என்று போட்டி போட்டோம். நான்தான் உரக்கக் கத்தினேன். என்குரல் எவ்வளவு தூரம் கேட்கிறது என்று கேட்பதற்காகக் குரலைத் துரத்திக்கொண்டு

நான் ஓடினேன். நீ எதிரே வந்து என்னைத் தடுத்திரா விட்டால் என் குரலை இந்நேரம் பிடித்திருப்பேன்!'' என்று விவரித்தான்.

பீர்பால் அவனைச் சமாதானப் படுத்தி, அவன் பெயர் விலாசத்தைக் குறித்துக் கொண்டான்.

ஒரு நாள் இரவு ஒரு தெரு விளக்கடியில் ஒருவன் எதையோ தேடிக்கொண்டிருந்தான். பீர்பால் அவன் அருகே சென்று, ''என்ன தேடுகிறாய்?'' என்று விசாரித்தான். ''என் மோதிரம் நழுவி விழுந்து விட்டது, தேடுகிறேன்'' என்றான் அவன்.

''நிச்சயமாக, இங்கேதான் மோதிரம் விழுந்ததா?'' என்று கேட்டான் பீர்பால்.

''இல்லை, அதோ அங்கே, புதரருகே என் மோதிரம் கீழே விழுந்தது. ஆனால் அங்கு ஒரே இருட்டாயிருக்கிறது. அதனால் தான் இங்கே, தெரு விளக்கடியில் தேடுகிறேன்'' என்று பதில் சொன்னான்!



பீர்பால் மோதிரத்தைத் தேடிக் கொடுத்துவிட்டு, அவன் பெயரையும் விலாசத்தையும் கேட்டறிந்து குறித்துக்கொண்டான்.

மறுநாள் பீர்பால் கடைத்தெருவில் செல்லும்போது ஒருவன், மற்றொருவனிடம் ''என் எருமை உன்னை என்ன செய்தது? உன் புலியை ஏவி என் எருமையை ஏன் கொல்லவேண்டும்? பார்க்கலாம்'' என்று கோபமாகப் பேசினான்.

அதற்குள் மற்றவன், ''போடா, போ, நான் அப்படித்தான் செய்வேன். உன் எருமையை மறைவாக அழைத்துப் போயேன்!'' என்றான்.

பீர்பால் அவர்களைச் சமாதானப் படுத்தி விஷயத்தை விசாரித்தார். இருவரும் நண்பர்கள். தெரு வழியே பேசிக்கொண்டு போனார்கள். ஒருவன் திடீரென்று, ''எனக்கு யாராவது ஒரு வரம் கொடுப்பதாகச் சொன்னால், ஓர் எருமை தான் வேண்டுமென்று கேட்பேன். என் வீட்டில் பால் முடையாக இருக்கிறது'' என்றானாம். அதற்கு மற்றவன் கிண்டலாக, ''நான் ஒரு புலி வேண்டுமென்று கேட்பேன்'' என்றானாம். ''உன் புலி என் எருமையைக் கொன்றுவிடுமா?'' என்று முதல்வன் கேட்க, ''ஆமாம் கொல்லும்'' என்று அவன் நண்பன் கூறினானாம். இருவருக்கும் வாக்குவாதம் தொடங்கிவிட்டதாம்.

அவர்கள் விலாசத்தையும் குறித்துக்கொண்டான் பீர்பால்.

இவ்விஷயத்தைப் பீர்பால் விசாரித்துக்கொண்டிருந்தபோது அங்கே இன்னும் சிலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

அவர்களுள் ஒரு நெய் வியாபாரி முன்னால் வந்தான். ''அட பரம முட்டாள்களே! உங்களைப் போன்ற முட்டாள்களை நான் பார்த்ததே கிடையாது!'' என்று சொல்லிய வண்ணம் தன் தலையிலிருந்த நெய் ஜாடியைத் தரையில் வீசி எறிந்தான். ஜாடி உடைந்தது. நெய் அவ்வளவும் மண்ணில் கொட்டி விட்டது. நெய் வியாபாரி, கூடியிருந்தோரைப் பார்த்து, ''நான் இப்போது கூறியது பொய்யானால் இந்த ஜாடி உடைந்ததுபோல் என் உடல் முறியட்டும்; இந்த நெய்யைப் போல் என் உடல் ரத்தம் கொட்டட்டும்!'' என்று பெருமையுடன் சபதம் செய்தான்!

பீர்பால் அந்த நெய்க்காரனின் பெயரையும் விலாசத்தையும் அறிந்து குறித்துக்கொண்டான்.

இன்னொரு நாள் பீர்பால் ஆற்றங்கரையில் இருவர் பல இடங்களில் மண்ணைத் தோண்டி வருவதைக் கவனித்தான். அருகே போய் விசாரித்தான். ''ஐயா, நான் குளிக்கப் போகுமுன் என் பணப்பையை இங்கே மண்ணில் புதைத்து வைத்தேன். இப்போது அதைக் காணவில்லை. தேடுகிறோம்'' என்றான் ஒருவன்.

''நீ அதை எங்கே புதைத்தாய்? புதைத்த இடத்துக்கு ஏதாவது அடையாளம் உண்டா?'' என்று கேட்டான் பீர்பால்

''ஓ! அடையாளம் ஒன்றும் இல்லாமல் நான் வைப்பேனா? நான் பணப்பையைப் புதைத்த இடத்துக்கு நேர் மேலே குட்டியானையைப் போல ஒரு வெள்ளை மேகம் இருந்ததே!'' என்றான் அவன். கடைசியில் இவர்களின் விலாசத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டான் பீர்பால்.

ஏழு நாட்கள் கழிந்தன. எட்டாவது நாள் காலை பீர்பால் அரசசபைக்குச் சென்றான். தான் குறித்து வைத்த எட்டுப் பேரையும் அங்கே வரவழைத்து, அக்பரிடம் அவர்கள் ஒவ்வொருவருடைய செய்கையையும் கூறினான். அவர்களை முட்டாள்கள் வரிசையில் தான் குறித்த காரணத்தையும் விளக்கினான்.

அக்பர், ''நான் பத்து முட்டாள்களைக் கூட்டி வரச் சொன்னேன். நீ எட்டுப் பேரைத்தானே அழைத்து வந்திருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''பத்துப்பேரும் **இங்கேதான்** இருக்கிறார்கள். உங்கள் எதிரில் இருப்பது எட்டுபேர். இவர்களை அடுத்த அறைக்கு அனுப்பினால் மற்ற இருவரும் இங்கே தோன்றுவார்கள்'' என்றான் பீர்பால்.

அவ்வாறே எட்டு முட்டாள்களும் அரச மண்டபத்திலிருந்து அகன்றனர்.

அக்பர், ''எங்கே, சீக்கிரம் காட்டு'' ஒன்பதாவது பத்தாவது முட்டாள்கள் எங்கே?'' என்றார்.

பீர்பால் மெதுவான குரலில், ''பிரபோ! சென்ற ஏழு நாட்களாக, உலகில் வேறு எவ்வளவோ முக்கியமான வேலைகளெல்லாம் இருக்க, அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, ஊரிலிருக்கும் முட்டாள்களைத் தேடிச் சென்றேனே, நான்தான் அந்த ஒன்பதாவது முட்டாள்!'' என்று பணிவாகப் பேசினான்.

''என்ன, நீகூட ஒரு முட்டாளா? வேடிக்கையாயிருக்கிறதே! சரி, பத்தாவது முட்டாள் யார் என்பதையும் ஊகித்துத் தெரிந்து கொண்டேன்'' என்று சொல்லிச் சிரித்தார்! தனிமையில் இருக்கும் போது பீர்பால் சுட்டிக் காட்டியதை அவர் புரிந்துகொண்டார். அவரேதான் பத்தாவது முட்டாள்!




"ஜனு"

அந்த அலங்காரமான மண்டபத்திலிருந்து வெளி வந்த அமலனுக்கு மீண்டும் கண்ணைக் கட்டி விட்டதுபோலிருந்தது. உள்ளேயிருந்த ஒளிக்கும் இங்கே இருந்த இருளுக்கும்தான் எத்தனை வித்தியாசம்!

வெளியில் இருந்த இருளைப் போலவே அவன் மனத்தினுள்ளும் இருள் கவிந்து கொண்டது. உள்ளே மணிச் சத்தம் கேட்டதும், உடனே ஊமை அவனை வெளியே அழைத்துக்கொண்டு வந்து விட்டதும் அவனுக்குப் பெரிய புதிராகவே இருந்தன. ஒருகால் விமலன் இப்போதுதான் அந்த மண்டபத்துக்கு வருகிறானே! அப்படியானால் எந்த வழியாக வந்திருப்பான்!

அமலனுக்குக் கொஞ்சம் மனோ தைரியம் வரத் தொடங்கியது. விமலனைவிட தான் ஒரு கட்டம் முந்தியிருப்பதாகத் தோன்றியதால் அந்த எண்ணம் கொஞ்சம் ஆறுதலாகவும் இருந்தது. ஆனால் மறுகணமே அவனுக்கு வேறு ஒரு சந்தேகம் எழுந்தது. விமலன் இப்பொழுதுதான் வருகிறானா அல்லது போகும் வழியில் திரும்புகிறானா? அப்படி ஏன் இருக்க முடியாது? இந்த எண்ணம் தோன்றியதோ இல்லையோ அவன் உடல் எல்லாம் ஒரு முறை நடுங்கியது.

கடைசியில் எப்படி இருந்தால் என்ன, எல்லாம் ஈசன் செயல் என்று தன் முயற்சியில் தீவிரமாக ஈடுபடலானான். காலைக் கீழே எடுத்து வைக்கவே பயமாக இருந்தது. விசாலமான அந்த மண்டபத்தில் தூண்களே காணப்படவில்லை. போகப் போக அந்த மண்டபம் நீண்டு போய்க்கொண்டேயிருந்தது. 'இது என்ன உலகத்திலேயே அதிசயமான கோட்டையாக அல்லவா இருக்கிறது!' என்று மலைப்புத், தட்ட அவன் சர்வ ஜாக்கிரதையாகப் போய்க்கொண்டிருந்தான்.

கால்களில் அடிக்கடி ஏதோ உயிர் ஜந்துக்கள் ஊர்ந்து செல்வது போலப் பட்டுக்கொண்டிருந்தது. ஏதாவது விஷ ஜந்துக்களாக இருந்தாலும் யாரைப் போய்க் கேட்பது?




தீண்டினால் அந்த இடத்திலேயே விழுந்து மாண்டுபோக வேண்டியது தான். ஆனால் நல்ல வேளையாக, எதுவும் அவனைத் தீண்டுவதாகக் காணோம். அதனால் சிறிது தைரிய மடைந்தவனாக நடந்து சென்றான். வெகு நேரம் சென்றபின், அந்த வாசல் அருகே காத்திராமல் போனோமே என்ற எண்ணம் உதித்தது. காத்திருந்தால் அந்தக் கதவைத் திறந்துகொண்டு விமலன் வெளிப்படலாம் அல்லவா? 'இனி அதை நினைத்து என்ன பயன்? விமலன் திரும்பிச் செல்வதாக இருந்தால் இந்த வழியே ஏன் வரப்போகிறான்?' என்ற எண்ணமும் கூடவே தோன்றவே அவன் மீண்டும் தன் முயற்சியைத் தொடர்ந்தான்.

சற்றுத் தூரம் போனதும் அந்த மண்டபத்தின் சுவர்கள் அவனைத் தடுத்தன. அதற்கு மேல் எந்த வழியாகப் போவது என்று தெரியவில்லை. அந்தச் சுவரையே பின்பற்றிச் சென்றால் என்ன என்று சுவர் ஓரமாகவே இடதுபுறமாகப் பிடித்துக்கொண்டு சென்றான். அப்படிச் சிறிது தூரம் போவதற்

குள்ளேயே ஒரு கதவு இருப்பது புலனுயிற்று. மெல்லத் திறந்தான்!

கதவு திறந்து கொண்டுவிட்டது. அவனுடைய மகிழ்ச்சிக்கு ஓர் எல்லேயே இல்லே. அந்த இடம் தீபங்களினுல் ஒளி பொருந்தியிருந்தது. அந்த அறையின் ஒரு மையத்திலே ஒரு பெரிய இரும்புப்பட்டங்கள் அடித்த பேழை இருந்தது. அதைக் கண்ட அமலனுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. ''இந்தப் பெட்டகத்தில்தான் அந்தச் செப்பு முறி இருக்கிறதோ! அப்படியாஞல் நான் இந்தப் போட்டியில் வென்று விட்டேனு? இது என்ன கனவா, நிஜமேதாஞ? இவ்வளவு சுலபத்திலா எனக்கு வெற்றி கிடைத்துவிட்டது!'' என்று அவன் எண்ணங்கள் மேலே மேலே சிந்தனே வலேகளேப் பின்னத் தொடங்கின.

துள்ளிக் குதித்துக்கொண்டே இரண்டே பர்ய்ச்சலில் அவன் அந்தப் பெரிய பேழையை நெருங்கிஞன். சுற்றிச் சுற்றி வந்தான்; மேலும் கீழும் பார்த்தான்; ஆராய்ந்தான். பெட்டிக்கு எந்தப் பக்கம் மூடி என்றே தெரியவில்லே. இரும்பு ஆணிகள் ஒவ்வொன்றும் அவனுடைய கால் கணு அளவு பெரிதாக இருந்தன. பெட்டியை உடைக்கவே பொழுது விடிந்து விடும் போலிருந்தது. இருந்தாலும் அமலன் தைரியத்தைக் கைவிடவில்லே. பெட்டியை உடைத்து விட்டதாகவும், உள்ளே இருக்கும் முறியை அடைந்துவிட்டதாகவுமே எண்ணிப் பெருமிதம் கொள்ளத் தொடங்கிவிட்டான்,

அந்த அறையின் மற்ருெரு கோடியில் இன்ஞெரு வாசல் தெரிந்தது. அந்த அறையினுள்ளேயோ அந்தப் பேழையைத் தவிர வேறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லே. எனவே அமலன் சிறிதும் தயங்காமல் பேழையைப் புரட்டிப் பார்க்க முற்பட்டான். அடேயப்பா! பெட்டி என்ன கனம், என்ன கனம்! புரட்டவே முடியவில்லே. ஒரு சிறு அசைவாவது அசைவதாகக்கூடத் தெரியவில்லே. தரையோடு தரையாகப் புதைத்திருக்கிருர்கள் போலிருந்தது: அதஞல் பெட்டியைப் புரட்டுகின்ற முயற்சியை விட்டு விட்டு, அதைத் திறப்பதற்கான வழிகளே ஆராயத் தொடங்கிஞன்.



எட்டுக்கோண மஹலேப் போல இந்தப் பெட்டிக்கும் மர்ம விசைகள் இருக்குமோ என்று ஒவ்வோர் ஆணியாகத் திருகித் திருகிப் பார்த்தான். ஒவ்வொரு பட்டங்களேயும் தொட்டு, தள்ளி, இழுத்து அசைத்தான். ஒன்றுக்காவது அந்தப் பேழை திறக்கும் வழியாக இல்லே. அந்தப் பேழை இரும்புப் பட்டங்கள் அடித்த மரப்

பேழையாகத் தெரிந்ததால் வாளை எடுத்துப் பிளந்து பார்க்கலாம் என்று எண்ணினான். அதற்கு முன்பாக இன்னொரு முயற்சிதான் பாக்கியிருந்தது. அதையும் செய்து பார்த்துவிட எண்ணி, மூடியுள்ள பெட்டியைத் தூக்குவதுபோல் தூக்கத் தொடங்கினான். எல்லாம் ஆசைதான்; வெறும் ஆசை! ஆனால் ஆசை எங்காவது பழுப்பதுண்டா? இதோ பழுத்துவிட்டது! பெட்டி சரி பாதியாகப் பிளந்தது போல் கையோடு அசையத் தொடங்கியது. பிளந்த இடமே தெரியாதபடி இரும்புப் பட்டம் ஒன்று பெட்டியைச் சுற்றி மறைத்துக் கொண்டிருந்தது.

அமலன் இழந்த நம்பிக்கையெல்லாம் மீண்டுவர, புதையல் எடுப்பவன் மனசு அடித்துக் கொள்வதுபோல மனம் படபடக்க, பெட்டியின் மேல் மூடியைத் தன் பலம் கொண்டமட்டும் முக்கித் தூக்கினான். தூக்கி ஒரே புரட்டாகப் புரட்டிக் கீழே தள்ளினான். படாரென்று இடி முழக்கத்தைப் போல் பேழையின் மூடி சரிந்து கீழே விழுந்தது.

அமலன் சிறிதும் தயங்காமல் பெட்டியின் அடிப் பாகத்தைக் குனிந்து எட்டிப் பார்த்தான்! எவ்வளவு பெரிய ஏமாற்றம்! அது ஒரு பாதாளக் கிணறு! மேல் மாடத்துக்குத் தண்ணீர் எடுக்க அந்தக் கிணறுதான் பயன் படுகிறது என்பதை ஊகிக்க அவனுக்கு அதிக நேரம் ஆகவில்லை. தண்ணீர் எடுக்கும் நேரம்போக மீதி நேரத்தில் அதை மூடி வைப்பதுதான் வழக்கம் என்றும் ஊகிக்க முடிந்தது. இல்லாவிட்டால் யாராவது தவறி விழுந்துவிடக் கூடுமல்லவா?

'அட தெய்வமே! இவ்வளவு சிரமமும் வீண்தானா?' என்று நொந்துகொண்டு பராக்காக அந்தக் கிணற்றைப் பார்த்தவனுக்குச் சட்டென்று மற்றொரு எண்ணம் பளிச்சிட்டது. அந்தக் கிணற்றுக்கு இறங்கிச் செல்ல சதுரமாகப் பிறைகள் இருந்தன. 'எப்படியும் கிணறு கீழ்மாடத்துக்கும் கீழேதானே இருக்கப் போகிறது? கீழ்மாடம் வரையில் இறங்கிப் பார்த்தால் என்ன?' என்ற எண்ணம் தோன்றியது. உடனே சிறிதும் தயங்காமல் அவன் பிறைகளில் காலை வைத்துக் கொண்டு இறங்கத் தொடங்கினான்.

கீழ்மாடத் தளத்துக்கு அருகில் ஒரு வாசல் இருப்பதைப் பார்த்து அவனுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. மெல்ல அந்த வாசலைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான். தூரத்தில் யாரோ பேசுவதன் எதிரொலி ஒன்று கேட்டது. அந்தத் திக்கை நோக்கி நடந்து சென்றான்.

அந்த இடத்தில் விளக்கு வெளிச்சம் எதுவும் இல்லாத போதிலும் கண் பார்த்துணரும் அளவுக்கு இயற்கை ஒளி இருந்தது. ஏதோ கால் போன போக்கில் மாடங்கள் கூடங்களாகக் கடந்து சென்றுகொண்டிருந்தான். ஒன்றைக் குறிப்பாக வைத்துக் கொண்டு அந்த இடத்துக்குப் போய்விடுவது என்று பிரயாசைப் பட்டால் ஏதோ அதற்கு ஒரு வழி புலப்படலாம். ஆனால் உத்தேசம் என்று எதுவும் இல்லாமல் எப்படிச் செல்வது? நடந்து நடந்து கால் இசிவு கண்டதுதான் மிச்சம். இரவு முழுவதும் நடந்து தீர்த்து விடுவது என்ற முடிவுக்குத்தான் அவன் வர வேண்டியதாயிற்று. அதற்கு முன்பாக முடியவில்லை என்றாலும் யாரிடம் போய்ச் சொல்ல முடியும்?

அமலன் அடியோடு நம்பிக்கையை இழந்துவிட்டான். விமலன்

கதி என்னவாயிற்றே என்பதைக் கூட அவனுக்கு எண்ணிப் பார்க்கப் பிடிக்கவில்லை. என்ன ஆனால் என்ன? முறியை அவன் தேடிக் கண்டெடுத்திருப்பான் என்பது சிறிதும் நடக்க முடியாத காரியம். இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஏதோ ஒரு மாய மாளிகைக்குள் நுழைந்துகொண்டு, இந்திரஜால வித்தை செய்வதுபோலவே இருந்தது இந்த முயற்சி. விமலனால் ஒருகாலும் முறியை எடுத்திருக்க முடியாது என்பது நிச்சயம்!

அமலன் ஓய்ந்துபோய் ஏதாவது ஓர் இடத்தில் சிறிது களைப்பாறலாம் என்று எண்ணினான். வசதியான இடமாக எங்கே இருக்கிறது என்று பார்த்து வந்தான்.

வெகுதூரம் போயிருக்க மாட்டான். அதற்குள் எதிரே தெரிந்த சாளரத்தின் வழியாக பிரகாசமாக வெளிச்சம் தென்பட்டது. உடனே ஓடிச் சென்று அவன் சாளரத்தில் ஏறி எட்டிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. சற்றும் எதிர்பாராத விதத்தில், நம்பிக்கையை அடியோடு இழந்துவிட்ட சந்தர்ப்பத்தில், தேடிய பொருள் கிடைப்பதென்றால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது அவனுக்கு முதலில். அங்கே சிம்மராஜா வர்ணித்த இரும்புப் பேழை அந்தப் பொக்கிஷ சாலையின் நடுவே மிகப் பந்தோபஸ்தாக அமைக்கப் பட்டிருந்தது தெரிந்தது. ஆனால் அமலன் அதை அந்தப் பேழையாகக் கருதாமல் மேல்தளத்தில் ஏமாற்றிய பேழைபோல இருந்தால் என்ன செய்வது என்று சங்கடப்பட்டான். அதனால் அதிக உற்சாகம் கொள்ளவில்லை. எப்படி இருப்பினும் அவன் கடமையைக் கைவிட்டுவிட முடியுமா?

## காந்தி மண்டப நிதி

**'கண்ணன்' மூலம் பணம் அனுப்பியிருப்பவர்கள்:**

| | |
|---|---|
| கண்ணன் கிளைக் கழகத்தினர், புதுவை | 7 0 0 |
| எஸ். ஸ்ரீநிவாஸன் விஷ்ணுபுரம் | 1 0 0 |
| பி. என். லோகநாதன், சிவராம்பேட்டை, மைசூர் | 1 0 0 |

அந்தப் பொக்கிஷ சாலைக்குப் போகும் வழி எது என்று ஆராய்வதில் சுறு சுறுப்பாக முனைந்தான். இவ்வளவு சங்கடங்களைக் கடந்து வந்துவிட்டு, மிகச் சுலபமாக உள்ளே போய்விட முடியுமா? அது அத்தனை சுலபமாக இராது என்பதை ஊகிக்கக் கற்பனையா வேண்டும்?

சுற்றிச் சுற்றி வந்தும் வழி புலப்படாமையால் அமலன் மீண்டும் சாரளத்துக்கே வந்தான். அவனுக்கு இப்போது ஒரு வழிதான் தோன்றியது. சாளரத்தில் ஒற்றைக் கல்லைப் பெயர்த்து உள்ளே குதித்துவிட வேண்டும்.

இவ்விதம் யோசித்தானோ இல்லையோ, அடுத்த கணம் வாளை உருவி கல்லைப் பெயர்க்கத் தொடங்கினான். வெகு நேரமாயிற்று அவன் அந்த முயற்சியில் வெற்றிபெற. கடைசியில் எட்டிக் கீழே பார்த்தால் குலை நடுக்கம் எடுத்தது. ஐம்பது அடி உயரமாவது இருக்கும் போலிருந்தது. என்ன ஆனாலும் சரி என்று உயிருக்குத் துணிந்துவிட்டான். கண்களை மூடிக்கொண்டு இஷ்ட தெய்வத்தை ஒருமுறை பிரார்த்தனை செய்து விட்டு, 'தொப்'பென்று உள்ளே குதித்துவிட்டான்.

(தொடரும்)

# பாவம், கண்டக்டர்!

**'நடனு'**

பஸ்ஸிலே மூச்சுக்கூட விட முடியாத கூட்டம். ஆபீஸ் செல்லும் நேரம். தவிர முகூர்த்த நாள் வேறு. கண்டக்டர் டிக்கெட் கொடுக்கவே திணறிக்கொண்டிருந்தான். "முன்னே போ; இடமில்லே; டிக்கெட், டிக்கெட்! எங்கே ஸார், போகணும்?" என்று எல்லாம் கத்திக் கத்தி அவன் தொண்டையே வலித்தது. கோபம் கோபமாக வந்தது அவனுக்கு.

அந்தச் சமயத்தில்தான் ஒரு மூலையிலிருந்து, "கண்டக்டர்! இங்கே வா" என்று ஒரு கீச்சுக் குரல் கேட்டது. கண்டக்டர் திரும்பிப் பார்த்தான். சில்லறையை எண்ணிக்கொண்டிருந்தான் ஒரு சிறுவன். அவன் இடது தோளிலே தொங்கிய பை அவன் பள்ளிக்கூடம் செல்பவன் என்பதைத் தெரிவிப்பதுபோல் தொங்கிக்கொண்டிருந்தது.

"என் தம்பி, என்னத்துக்குக் கூப்பிட்டே? டிக்கெட் வேணுமா?" என்று கேட்டான் கண்டக்டர், ஆயாசமான குரலில்.

"டிக்கெட் வாங்கியாச்சு. சில்லறை.." என்று முனகினான் பையன்.

"சில்லறையா, அதான் உடனே கொடுத்துட்டேனே?" அவன் குரலில் உறுதி தொனித்தது.

"ஆமாம் அப்பா; கொடுத்துட்டே. ஆனல் அதிலே தவறுதல்.."

"அதெல்லாம் ஒரு தவறுதலும் இருக்காது. நம்பகிட்டே தவறவே தவறாது. எல்லாம் சரியா இருக்கும். சட்டைப்பை எல்லாம் நல்லாப் பாரு. என்ன விளையாடறியா?"

"இல்லேப்பா, இதோ கையிலேயேதான் வச்சிருக்கேன். நிச்சயமா தவறுதலாகத்தான் நீ.."

"இங்கே பாரு! தவறுதல் இருந்தா நீ அப்பவே கேட்டிருக்கணும். இவ்வளவு தூரம் வந்த பிறகு தவறு, குறைவு என்று சொன்னல் என்னல் ஒப்புக்கொள்ள முடியாது" என்று கண்டிப்பாகக் கூறினன் பொறுமை இழந்த கண்டக்டர்.

அதற்குள் பையன் இறங்க வேண்டிய 'ஸ்டாப்பிங்' வரவே, பையன் இறங்கினன்.

"கண்டக்டர்! நான் 8 அணுதான் கொடுத்தேன். நீ டிக்கெட் போக ஒரு ரூபாய்க்குச் சில்லறை கொடுத்துவிட்டாய். அதைச் சொல்லித் திருப்பிக் கொடுக்கலாம் என்று நினைத்தால், நீ பேசவே விடவில்லே. கொடுத்தது, கொடுத்ததுதான் என்று கூறிவிட்டாய். என்ன செய்வது, அந்தக் காசுக்கு ஒரு கட்டு யானை வெடி வாங்கி உன் ஞாபகார்த்தமாகத் தீபாவளிக்கு வெடித்து விடுகிறேன். வந்தனம்" என்று கத்தினன் பையன்.

அதற்குள் பஸ் நகர்ந்து விட்டது. தலையை நீட்டிக்கொண்டிருந்த கண்டக்டர், அசடு வழிய அப்படியே அசந்துபோனன். பஸ் உள்ளிருந்து கேட்ட சிரிப்பொலி பஸ்ஸே கவிழ்ந்துவிடும்போல் கேட்டது.



# எங்கள் பகுதி

வணக்கம். இந்த வருஷத்துத் தீபாவளி மலரைப் பற்றி வர்ணிக்க வேண்டுமானால் அது மாதிரி மலர் இதுவரை வரவேயில்லை என்றுதான் சொல்வேன். கண்ணன் மலர் இல்லாவிட்டால் தீபாவளி கொண்டாட்டமாகவே இருந்திருக்காது. தீபாவளியைப் பூரணமாக்கி விட்டது மலர். மலர் அவ்வளவு பிரமாதம்!

ஓவியர் 'தலா'வின் அட்டைப் படம் அழகான சிவப்புப் பட்டாடை போர்த்து வர்ணஜாலம் செய்கிறது! அப்பப்பா! அதில் தான் எத்தனை வர்ணங்கள்!

சோகம், ஹாஸ்யம், வீரம், திடுக்கிடும் சம்பவம் - இவை எதிலுமே சளைக்கவில்லை மலரிலுள்ள கதைகள். ஒவ்வொரு கதையைப் படித்து முடித்ததும் ஒவ்வொரு 'ஸ்வீட்' சாப்பிட்டது போலிருந்தது. அவ்வளவு ருசி!

புதுமையின் பொலிவிலே, பூத்துக் குலுங்கும் மகிழ்ச்சி மலரிலே சிறப்பின் சிகரமாக விளங்குகிறது 'பண்பாடு' என்ற கதை.

சிந்தைக்குத் தகுந்த விருந்து - கவிதைகள் யாவும்; இனிய கருத்துக்களை எளிய நடையிலே கூறின. பாடல்களின் கவிதை நயம் போற்றத் தக்கது!

'டாலி'யின் சித்திரங்கள் யாவும் சிறந்த ஹாஸ்ய சித்திரங்களாகத் திகழ்கின்றன. அவர் நல்ல புகழைச் சம்பாதித்து விட்டார்!

காத்திருந்த கண்களுக்கு நேர்த்தியான கண்ணைப் பறிக்கும் கலா ஒளிகளால் களிப்படைகிறேன்! உள்ளத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது ஓவியர் ஸாமி, சுசி, சுப்புவின் ஒப்பற்ற ஓவியங்கள். புதுமலர்ப் பூங்காவிலே புகழுக்குரிய புகைப்படங்களால் பூரிப்படைகிறேன்! ராமகிருஷ்ணாவின் போட்டோக்கள் வழக்கம் போலவே நன்கு அமைந்திருக்கின்றன.

மலர் முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை, படிக்கப் படிக்க உள்ளத்தில் உற்சாகத்தையும் மனத்தில் மகிழ்ச்சியையும் இதயத்தில் இன்பத்தையும் ஊட்டியது.

மொத்தத்தில் மலர் தன் பெயருக்கேற்ற மதிப்பைத் தவற விடாமல், இவ்வருட விசேஷத் தீபாவளி மலர் வரிசையில் முதலிடம் பெற்றுவிட்டது!

இது போன்ற சிறப்பான மலரைத் தயாரித்து வெளியிடுவது கண்ணன் காரியாலயத்தின் இயற்கை வழக்கம். இருந்தாலும் அதன் உயர்வைப் பாராட்டுவது ரசிகர்களாகிய எங்கள் கடமையல்லவா?

—மகாலிங்கம், விஷ்ணுபுரம்.

## மணங் கமழ் வண்ண மலர்

தீபாவளித் தினத்தினிலே தீஞ்சுவை நாளினிலே,
தேன்சுவைப் பண்டங்கள் திகட்டுமட்டும் தின்னுகையில்,
'தபால்' என்ற குரல்கேட்டுக் குபீரென் றெழுந்தநான்
தொபீரென விழுந்த எந்தன் கண்ணனை எடுத்துவந்தேன்.
உறையைப் பிரித்ததுமே உள்ளங் கவர்ந்ததுவே
குறும்புக் கண்ணனே கோபியை ஏமாற்றி
மரத்தின் மீதமர்ந்து பால்தயிர் வெண்ணெயினை
திருடும் காட்சியினைக் காட்டிடும் சித்திரமே.
எடுத்தவுடன் ஆசிரியர் குழந்தைகளை அன்பாக
அழைத்தே கண்ணனின் அழகினைக் காட்டுகிறர்.
அடுத்தபடி ராஜாஜி கண்ணனின் விளையாட்டை
அழகா யெடுத்துச் சொல்லி ஆனந்த மூட்டுகிறர்.
அழிந்துபோன அழகற்ற 'சைனு எழுத்துக்கள்'
அத்தனையும் தமிழெழுத்தாய் முடிந்திட்ட விந்தைகாண்.
'குழந்தைகள் எத்தனை' என்று நம்மைக் கேட்கின்ற
சித்திரம் நம் கண்ணைச் சோதிக்கும் விசித்திரம் பார்!
பாரதியின் 'கண்ணன் என் சேவகன்' பாட்டினுக்கே
நேராக அபிநயிக்கும் சாருவுக்கு என் வாழ்த்து.
ஜோராக உள்ளனவே ஜோதிமாமா 'விடுகவி'கள்
சீரான நல்விருந்தாய் அமைந்தது 'எங்கள் ஜாதி'
இத்தனை சிறப்பு வாய்ந்த எழில் மிக்க கண்ணனையே
மோத்தத்தில் மணம்கமழும் வண்ணமலர் என்றே நான்
மெத்தவும் புகழ்ந்துரைத்துப் பாடுகின்ற பாடலிலே
எத்தனையோ பிழையிருக்கும் தயை செய்து மன்னிப்பீரே.
அருமையான கண்ணனும்
பெருமை மிக்க கண்ணனும்
சிறு வருள்ளம் மகிழவே
சிரிப்பை யூட்டும் கண்ணனும்.
எங்கள் அன்புக் கண்ணனே
தங்கக் கதைகள் சொல்வான்.
மங்களமா யவன்புகழ்
எங்குமோங்கித் தங்கவே!

—கிரிஜா, வத்தலகுண்டு.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

திருநெல்வேலி:
- உபதலைவர்: அ. ஸ்ரீநிவாஸன்
- செயலாளர்: சி. து. கார்த்திகேயன்
- துணைச் செயலாளர்: இ. சொக்கலிங்கம்

பத்துபேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. வாசக சாலையும் 'ஸ்ரீஜயந்தி' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடை பெறுகின்றன.

கிழக்கடயம்:
- தலைவர்கள்: மா. சௌந்தரராஜன்
  சி. பாலகிருஷ்ணன்
- செயலாளர்: இரா. அந்தோணி ராஜ்
- துணைச் செயலாளர்கள்: பொ. திரவியசுந்தரம்
  ஞா. எ. வலேரியான்ராஜா
- பொருளாளர்: ஜெ. பிரான்ஸிஸ்

பதினைந்துபேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. 'அறிவுச் சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பீளமேடு:
- உபதலைவர்: ஆர். ராஜகோபால்
- செயலாளர்: வி. கே. நாராயணசாமி
- பொக்கிஷதார்: பி. கே. வெங்கடபதி

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. 'நீலவானம்' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

## பேனா நண்பர்கள்

1. R. ராஜகோபாலன், 2. முத்துப் பண்டாரம் சந்து, பீளமேடு.

2. M. சௌந்தரராஜன், s/o மாணிக்க நாடார், கீழக்கடயம், கடயம் போஸ்டு.

3. P. S. சந்தானம், 24. சாமி செட்டித்தெரு, திருப்பத்தூர். (வ. ஆ.)

4. A. R. ராமமூர்த்தி, A. R. சிவராமன், 4 கரூர் கிருஷ்ணசாமி நாயுடு தெரு, குயப்பேட்டை, வேலூர். (வ. ஆ)

5. M. அழகப்பன், முரு. மு. வீடு, கோனுப்பட்டு போஸ்டு, திருச்சி ஜில்லா.

6. S. முத்து, 28. கானல் ரோடு, தபால் பெட்டி 56, தலுக் அன்சான், மலாயா.

7. N கந்தசாமி, 32. கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.

8. K. N. மகாலிங்கம், மேலத்தெரு, விஷ்ணுபுரம், தஞ்சை ஜில்லா.

9. K. S சக்கரவர்த்தி, 9. 2-வது தெரு, பெருமாள்புரம், பாளையங்கோட்டை போஸ்டு

10. N. புருஷோத்தமன், 92, அங்காளம்மன்கோயில் தெரு சூளை, சென்னை-7

11. R. கிருஷ்ணமூர்த்தி, 11, லஜபதிராய் ரோடு, தல்லாகுளம் போஸ்டு, மதுரை.

12. G. வைத்தீசுவரன், s/o S. V. கணபதி ஐயர், போஸ்ட் மாஸ்டர், கூகளூர், கோவை ஜில்லா.

Reg. No. M. 5542

புதிய கண்ணன் வெளியீடுகள்

## பவழவல்லி

கி. ரா. எழுதியது

அது ஒரு தனி உலகம். அங்கே வசிக்கும் மனிதர்கள் எல்லாரும் விசித்திரமானவர்கள். பிராணிகளும் விசித்திர இயல்பு கொண்டவை. முத்துக்களும், நவரத்தினங்களும், பவழங்களும் விளையும் நாடு. அங்கே போய்ச் சேருகிறான் சுந்தரம். ராஜகுமாரி பவழவல்லியைச் சந்திக்கிறான். அவனால் ஆகாத காரியத்துக்கெல்லாம் ஆமை ஒன்று உதவுகிறது. பல விதச் சோதனைகளில் அகப்பட்டுக்கொள்கிறான். சுவாரஸ்மான கதை.

**விலை 12 அணா**

## மின்னல் அரக்கன்

இதில் உள்ள கதைகள் எல்லாம் அற்புதமான கர்ண பரம்பரைக் கதைகள். மாயாஜாலங்கள் புரியும் மாயாவிகளும், சோதனைகளில் வெற்றி பெறும் வீரர்களும், ஆபத்தில் சிக்கித் தவிக்கும் ராஜகன்னிகைகளும் இந்தக் கதைகளில் பாத்திரங்களாக வருகிறார்கள். கதையின் போக்கும் கற்பனை அழகும் நம் உள்ளத்தைக் கவரக்கூடியவை. படித்துப் பாருங்கள்.

**விலை 8 அணா**

## வால் அறுந்த குரங்கு

வால் அறுந்த குரங்கு, இதோ இந்தப் பிள்ளை, ஈயின் கதை முதலிய ஐந்து பாட்டுக் கதைகள் அடங்கிய சிறுவர் புத்தகம். பாட்டைப் பாடிக்கொண்டே எழுத்துக்களைக் குழந்தைகள் கற்றுக்கொண்டு விடுவார்கள். வர்ணப்படங்கள் நிறைந்தது.

**விலை 8 அணா**

## சமர்த்து மைனா

தி. ஜ. ர. எழுதியது

இந்தப் புத்தகத்தில் எட்டுக் கதைகள் இருக்கின்றன. கதைகள் என்றால் கட்டுக் கதைகள் அல்ல. எல்லாம் உண்மைக் கதைகள்; விலங்குகள், பறவைகள் இவற்றின் குணங்களையும் பழக்க வழக்கங்களையும் உள்ளபடி சித்திரிக்கும் கதைகள். சுவையுள்ள கதைகள். அழகிய படங்கள் நிறைந்தது.

**விலை 8 அணா**

கண்ணன் அங்கத்தினர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும்
12½ சதவிகிதம் கமிஷன் உண்டு.

**கண்ணன் காரியாலயம்**

மயிலாப்பூர் :: :: சென்னை—4.